ISSN: 2582–5518






# புதுகை வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM · VARALARUU · PUDUGAIVARALARU · VARALARUU · 7502051351






செவ்வாய் ❖ செப்டம்பர். 26, 2023 | சென்னை & புதுக்கோட்டை | 6 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 360 ❖ ரூ.10




# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்







## சங்கரன்கோவில், வாசுதேவநல்லூரில் மகளிர் ஊக்கத்தொகை

# அனைவருக்கும் வழங்க நடவடிக்கை எடுப்பது தொடர்பான ஆலோசனைக் கூட்டம்



சங்கரன்கோவில். செப்.26–

தமிழக அரசின் மிகப்பெரிய திட்டமான மகளிர் உரிமை தொகை திட்டம் துவங்கப்பட்டு மகளிர்களுக்கு ரூபாய் 1000 வழங்கப்பட்டு வருகின்றது. இதில் சில நபர்களுக்கு விண்ணப்ப படிவத்தில் உள்ள பிழைகள் மற்றும் விண்ணப்பம் கொடுக்காதவர்களுக்கு மீண்டும் விண்ணப்பம் வழங்க அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. சங்கரன்கோவில், வாசுதேவநல்லூர் சட்டமன்ற தொகுதியில் மகளிர் ஊக்கத்தொகை அனைவருக்கும் வழங்க நடவடிக்கை எடுப்பது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் வைத்து வடக்கு மாவட்டச் செயலாளர் ராஜா எம் எல் ஏ தலைமையில் நடைபெற்றது.

இதில்சங்கரன்கோவில் தாசில்தார் பாபு, சிவகிரி தாசில்தார் ஆனந்த், திருவேங்கடம் தாசில்தார் பரமசிவன், ஆகியோர்களுடன் வடக்கு மாவட்டச் செயலாளர் ராஜா எம்எல்ஏ ஆலோசனை நடத்தினார், தொடர்ந்து அவர்களிடம் பேசிய ராஜா எம்எல்ஏ மூன்று தாலுகாக்களிலும் பயனாளிகள் எத்தனை பேர்என்பதைகண்டறிந்து யாருக்கெல்லாம் இந்த உதவிதொகைவந்துள்ளது என ஆராய்ந்து விடுபட்டவர்களிடம் புதிய விண்ணப்பங்களை பெற்று உடனடியாக மகளிர் உரிமை தொகை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தினார். மேலும் ஏற்கனவே விண்ணப்பம் செய்தவர்களின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு இருந்தால் அதை முறையாக ஆய்வு செய்து அதில் ஏதாவது குறைகள் இருந்தால் அதை சரி செய்து உரிமைதொகை பெற தகுதி உள்ள அனைத்து மகளிர்களுக்கும் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தினார். தமிழக அரசின் திட்டங்கள் அனைத்து தரப்பு மக்களுக்கும் செல்ல வேண்டும் என்ற முனைப்பில் ஆட்சி செய்து வரும் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சியில் இந்த உரிமை தொகை தகுதியுள்ள மகளிர்கள் யாருக்கும் விடுபடாத வண்ணம் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென வலியுறுத்தினார்.

# ஆசிய விளையாட்டுப் போட்டி இந்தியாவுக்கு முதல் தங்கம் 10மீ ஏர் ரைபிள் பிரிவில் ஆடவர் அணி உலக சாதனை



ஹாங்சோ , செப். 26–

19-வது ஆசிய விளையாட்டுப் போட்டியில் இந்தியா தனது முதல் தங்கப் பதக்கத்தைவென்றுள்ளது. 10 மீட்டர் ஏர் ரைபிள் பிரிவில் இந்திய ஆடவர் அணி தங்கப் பதக்கம் வென்றுள்ளது.

முன்னதாக ஞாயிற்றுக்கிழமை 10 மீட்டர் ஏர் ரைபிள் துப்பாக்கிச் சுடுதலில் வெள்ளி வென்ற வீராங்கனைகள் இந்தியாவின் பதக்கக் கணக்கை தொடங்கிவைத்தனர். தற்போது ஆடவர் அணி இந்தியாவுக்கான தங்கப் பதக்கக் கணக்கைத் தொடங்கியுள்ளது.

10 மீட்டர் ஏர் ரைபிள் போட்டியில் இந்திய வீரர்கள் ருத்ரான்க்ஷ் பாட்டீல், ஐஸ்வர்ய் பிரதாப் சிங் தோமர், திவ்யன்ஷ் சிங் பன்வார் அடங்கிய குழு தங்கம் வென்றது. கூடவே, 1893.7 புள்ளிகள் பெற்று இப்போட்டியில்முந்தைய உலக சாதனையை முறியடித்துள்ளது. கடந்த ஆசிய விளையாட்டுப் போட்டியில் சீன ஆடவர் குழு வீரர்கள் நிகழ்த்திய சாதனை முறியடிக்கப்பட்டுள்ளது.

19-வது ஆசிய விளையாட்டு போட்டி சீனாவின் ஹாங்சோ நகரில் உள்ள லோட்டஸ் மைதானத்தில் கடந்த சனிக்கிழமை வண்ணமயான நிகழ்ச்சியுடன் கோலாகலமாக தொடங்கிய நிலையில் இந்தியா நேற்று (செப்.25) தனது முதல் தங்கத்தை வென்றுள்ளது. மேலும், துடுப்புப் படகு செலுத்துதல் போட்டி ( 4 பேர் கொண்ட அணி) பிரிவில் இந்தியாவுக்கு வெண்கலப் பதக்கம் கிடைத்துள்ளது. இரண்டு நாட்களில்இந்தியா 1தங்கம் உள்பட 8 பதக்கங்களைப் பெற்றுள்ளது.

ஒலிம்பிக் போட்டிக்கு பிறகு ஆசிய விளையாட்டு பெரிய அளவிலான போட்டியாக திகழ்கிறது. 2018ம் ஆண்டு ஆசிய விளையாட்டு போட்டியில் 11 ஆயிரம் வீரர், வீராங்கனைகள் பங்கேற்ற நிலையில் தற்போது 12 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்றுள்ளனர். வரும் அக்டோபர் 8-ம் தேதி வரை நடைபெற இந்தப் போட்டியில் இந்தியாவில் இருந்து 655 பேர் பங்கேற்றுள்ளனர்.




# சீர்காழி அரசு மருத்துவமனையில் 4 பேர் டெங்கு பாதிப்புக்கு சிகிச்சை



சீர்காழி, செப். 26–

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியை அடுத்த மேலச்சாலை பகுதியை சேர்ந்த சுமார் 20 வயதுக்கு உட்பட்ட கல்லூரி மாணவர் சென்னையிலிருந்து சொந்தவூருக்கு வந்திருந்தார்.

அவருக்கு தொடர்ந்து காய்ச்சல் இருந்ததால் சீர்காழி அரசு மருத்துவமனையில் பரிசோதனை செய்தபோது டெங்கு அறிகுறி இருப்பது தெரிய வந்தது.

இதனை அடுத்து அரசு மருத்துவமனை டெங்கு சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். இதேபோல் பெங்களூரில் இருந்து வந்தவருக்கும், சீர்காழியை சேர்ந்த இருவருக்கும் டெங்கு பாதிப்பு இருந்ததை அடுத்து சீர்காழி அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். சீர்காழி அரசு மருத்துவமனையில் டெங்கு பாதிப்புக்குஉள்ளானவர்களுக்கு சிகிச்சை அளிக்க தனி வார்டு அமைக்கப்பட்டுள்ளது.

டெங்கு பாதிப்பு அடுத்து சீர்காழி நகராட்சி சார்பில் கொசு மருந்து அடிக்கும் பணி தீவிர படுத்தப்பட்டுள்ளது. பொதுமக்கள் தங்கள் வீடுகளை சுற்றி உள்ள பகுதிகளில் தேவையில்லாத தூக்கி எறியப்பட்ட டயர்கள் தேங்காய் ஓடுகள், பழைய பொருட்கள், பாத்திரங்கள் ஆகியவற்றில் தண்ணீர் தேங்காதவாறு கண்காணித்து அதனை அப்புறப்படுத்த நகராட்சி நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது.

# இந்தியாவை துல்லியமாகக் காட்டும் 'எக்ஸ்–ரே' தான் சாதிவாரி கணக்கெடுப்பு ராகுல் காந்தி



பிலாஸ்பூர் (சத்தீஸ்கர்), செப். 26–

இந்தியாவை துல்லியமாகக் காட்டும் எக்ஸ்-ரே (X-ray) ஆக சாதிவாரி கணக்கெடுப்பு இருக்கும்என்று காங்கிரஸ் முக்கியத் தலைவர் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

விரைவில் சட்டப்பேரவைத் தேர்தல் அறிவிக்கப்பட உள்ள சத்தீஸ்கரின் பிலாஸ்பூரில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டத்தில்பேசியராகுல் காந்தி, "இந்தியாவில் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தினால்தான் நாட்டில் எஸ்.சி. மக்கள், எஸ்.டி. மக்கள், ஓபிசி மக்கள் எவ்வளவு பேர் இருக்கிறார்கள் என்பதை நம்மால் சரியாக தெரிந்து கொள்ள முடியம்.

சாதிவாரி கணக்கெடுப்பு என்பது எக்ஸ்-ரே போன்று இந்தியாவை துல்லியமாகக் காட்டும். தற்போது மத்திய அரசின் அமைச்சக செயலர்கள் 90 பேரில் 3 பேர் மட்டுமே ஓபிசி பிரிவைச் சேர்ந்தவர்கள். எனவே, இதைச் சுட்டிக்காட்டி சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்புக்கு ஏன் அஞ்சுகிறீர்கள்; மக்கள் தொகைகணக்கெடுப்பின் தரவுகளை பகிரங்கமாக பகிருங்கள் என்று சொன்னேன். ஆனால், காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் சாதிவாரி கணக்கெடுப்பை நாங்கள் நடத்துவோம். இது எனது வாக்குறுதி.

ரிமோட் கன்ட்ரோலின் பட்டனை நாம் வெளிப்படையாக அழுத்துவோம். ஆனால், பாஜக ரிமோட் கன்ட்ரோலை ரகசியமாக அழுத்தும். பாஜக ரகசியமாக ரிமோட் கன்ட்ரோலை அழுத்தியதை அடுத்தே, மும்பை விமான நிலையம் அதானிக்கு கிடைத்தது. பொதுத்துறை நிறுவனம் தனியார் நிறுவனமாக மாறியது. மக்களவையில் பிரதமர் மோடியிடம் அதானி குறித்து கேள்வி எழுப்பினேன். அதற்கு எனக்கு கிடைத்த பதில்தான், எம்.பி பதவி நீக்கம். காங்கிரஸ் ஆளும் மாநிலங்கள் அனைத்திலும் பொதுமக்களே தலைமை வகிக்கின்றனர். நமது அரசுகள் அதானியால் இயங்கவில்லை. எங்களின் அனைத்து ரிமோட் கன்ட்ரோல்களும் பொதுமக்களின் பார்வைக்கு உட்பட்டவை" என்று ராகுல் காந்தி தெரிவித்தார்.

முன்னதாக, ஞாயிறு நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய ராகுல் காந்தி, "இந்த ஆண்டு இறுதிக்குள் தேர்தல் நடைபெற உள்ள மாநிலங்களில் மத்தியப் பிரதேசம் மற்றும் சத்தீஸ்கரில் காங்கிரஸ் கட்சி உறுதியாக ஆட்சி அமைக்கும். தெலங்கானாவிலும் ஆட்சி அமைக்க வாய்ப்பு உள்ளது. ராஜஸ்தானைப் பொறுத்தவரை போட்டி சமமாக இருக்கும்" என்று தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# வந்தே பாரத் ரயில் சேவையை கன்னியாகுமரி வரை நீட்டிக்க ஓபிஎஸ் கோரிக்கை



சென்னை , செப். 26–

திருநெல்வேலி - சென்னை இடையிலான வந்தே பாரத் ரயில் சேவையை பிரதமர் மோடி காணொலி காட்சி மூலம் ஞாயிற்றுக்கிழமை தொடங்கி வைத்தநிலையில் இந்த ரயில் சேவையை தென் தமிழ்நாட்டின்கடைக்கோடி மாவட்டமான கன்னியாகுமரி வரை நீட்டிக்க வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடிக்கு தமிழக முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் எழுதியுள்ள கடிதத்தில், "நெல்லை - சென்னை வந்தே பாரத் ரயில் திட்டம் தொடங்கப்பட்டதற்காக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ரயில் சேவையால், நெல்லையில் இருந்து சென்னைக்கான பயண நேரத்தை 12 மணி நேரத்திலிருந்து 8 மணி நேரமாகக் குறைத்துள்ளது. இந்தச் சேவையை தமிழகத்தின் தென் கடைக்கோடி மாவட்டமான கன்னியாகுமரி வரை நீட்டிக்கவேண்டும் என்று வலியுறுத்துகிறேன்" என்று கூறியுள்ளார்.

முன்னதாக, நெல்லை - சென்னை எழும்பூர், விஜயவாடா - சென்னை சென்ட்ரல் உட்பட நாட்டின் 11 மாநிலங்களை இணைக்கும் வகையில் 9 வந்தே பாரத் ரயில்களை பிரதமர் நரேந்திர மோடி காணொலி மூலம் தொடங்கி வைத்தார்.

நாட்டின் அதிவேக சொகுசு ரயிலான வந்தே பாரத் ரயில்கள் சென்னை பெரம்பூர் ஐசிஎஃப் தொழிற்சாலையில் தயாரிக்கப்படுகின்றன. உள்நாட்டு தொழில்நுட்பத்தில் உருவாக்கப்படும் இந்த ரயில்கள் மணிக்கு அதிகபட்சமாக 180 கி.மீ. வேகத்தில் செல்லக்கூடியவை.

டெல்லி - வாரணாசி இடையே முதல் வந்தே பாரத் ரயில் சேவை கடந்த 2019 பிப்.15-ம் தேதி தொடங்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, 24 வழித்தடங்களில் இந்த சேவை தொடங்கப்பட்டது. நாடு முழுவதும் தற்போது 25 வந்தே பாரத் ரயில்கள் இயக்கப்பட்டுவருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆவணம் தொலைந்துவிட்டது

புதுக்கோட்டை தாலுகா & மாவட்டம், கவிநாடு மேற்கு வருவாய் கிராமத்தில், பட்டா எண் 15-ல் அடங்கிய புல எண்கள் 371/11, 377/ 5B, 379/1, 379/2, 379/8-ல் அடங்கிய ஆககூடுதல் ஹெக்டேர் 0-41.00 ஏர்ஸ் பரப்பளவுடைய நிலத்தினை மேற்படி சுப்பிரமணிய நகர், மருப்பனிரோடு, கதவு எண் 55 முகவரியில் வசிக்கும் எனது கட்சிக்காரர் **து.அருள்சாமி** அவர்கள் கிரையம் பெற்ற **புதுக்கோட்டை இணை சார்பதிவாக ஆவண எண் 1-3309/2011-ன் படி** பதிவு செய்த அசல் ஆவணத்தை கடந்த 05-07-2023 தேதி மாலை 4.30 மணியளவில் திருக்கோகர்ணம் மியூசியம் கடைவீதிக்கு பையில் எடுத்து சென்றபோது கைதவறுதலாக தொலைத்துவிட்டார். தொடர்ந்து தேடியும் கிடைக்கவில்லை. மேற்படி ஆவணத்தை காண கிடைத்தவர்கள் மேற்படி து.அருள்சாமி வசமோ, கீழ்கண்ட முகவரியிலோ ஒப்படைக்க வேண்டுகிறேன். மேற்படி அசல் ஆவணத்தினை எந்தவித அடமானமோ, கிரையமோ அல்லது வேறு எவ்வித வில்லங்கமும் செய்யவில்லை.

**து.கண்ணன்.,B.A.,B.L., அட்வகேட், செல் :9944002434**
**05,கரீம் காம்பிளக்ஸ்,மனை எண்:16,நிஜாம் காலனி,**
**புதுக்கோட்டை-622001**



காரைக்கால் மாவட்டம், காரைக்கால் நகராட்சிக்கு உட்பட்ட வடிகால் வாய்க்கால் மற்றும் அதன் கிளை வாய்க்கால்களை உள்ளடக்கிய 7 கிலோ மீட்டர் நீளத்திற்கு ரூபாய் 9,00,000/- செலவில் தூர்வாரும் பணியானது நேற்று காலை 10.00 மணியளவில் துவங்கி வைக்கப்பட்டது. இவ்விழாவில் காரைக்கால் வடக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திருமுருகன் காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன், மற்றும் காரைக்கால் பொதுப்பணித்துறை, நீர்பாசனம் மற்றும் பொதுசுகாதாரக் கோட்ட நிர்வாகப் பொறியாளர் மகேஷ் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை உதவிப்பொறியாளர் அருள்அரசன் சிறப்பாக செய்திருந்தார்.

# திருப்பூரில் 10 ஆயிரம் சிறு, குறு நிறுவனங்கள் வேலைநிறுத்தம் 3 லட்சம் தொழிலாளர்கள் பாதிப்பு – ரூ.500 கோடி வர்த்தக இழப்பு ஏற்படும் என கணிப்பு



திருப்பூர் , செப். 26–

மின் நிலை கட்டண உயர்வு ரத்து உள்ளிட்ட 5 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி திருப்பூரில் 10 ஆயிரம் நிறுவனங்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால், 3 லட்சம் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். நேற்றுஒருநாளில்திருப்பூரில் மட்டும் 500 கோடி ரூபாய் வர்த்தகம் பாதிக்கும் சூழல் உருவாகியதாக கூறப்பட்டுள்ளது.

தமிழக மின்வாரியம் சார்பாக உயர்த்தப்பட்டுள்ள 430 சதவீதநிலைக்கட்டணத்தை திரும்பப் பெற வேண்டும் எனவும் , பரபரப்பு நேர கட்டணம் , சோலார் மேற்கூரை நெட்வொர்க் கட்டணத்தைரத்துசெய்ய வேண்டும் , மல்டி இயர் டாரிப் கட்டணத்தை உடனடியாக ரத்து செய்ய வேண்டும் மற்றும் இரண்டு ஆண்டுகளுக்கு மின் கட்டணத்தை உயர்த்துவதை தவிர்க்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு தொழில்துறை மின் நுகர்வோர் கூட்டமைப்பு சார்பாக ஏற்கனவே கடந்த 7ஆம் தேதி காரணம்பேட்டை பகுதியில் உண்ணாவிரத போராட்டமும் , தமிழக முதல்வரின் கவனத்தை ஈர்க்கக் கூடிய வகையில் கடிதம் மற்றும் இமெயில் அனுப்பும்போராட்டங்கள் நடத்தப்பட்டன.

இந்நிலையில் கோரிக்கைகள்ஏற்கப்படாத நிலையில் நேற்று (செப். 25ம் தேதி) தமிழ்நாடு தொழில்துறை மின் நுகர்வோர் கூட்டமைப்பு சார்பாக உற்பத்தி நிறுத்த போராட்டத்துக்கு அழைப்புவிடுக்கப்பட்டது.

இதற்கு ஆதரவு தெரிவித்துதிருப்பூரில்உள்ள பனியன் நிறுவனங்கள் நெட்டிங் எம்ராய்டரி பிரிண்டிங், சாய அலைகள் என 19 சங்கங்கள் ஆதரவு தெரிவித்தன. அதன்படி, இன்று கதவடைக்கும் போராட்டம் நடைபெறுகிறது. 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறு, குறு நிறுவனங்கள் இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டதால் 3 லட்சம் தொழிலாளர்களுக்கு வேலைஇழப்புஏற்பட்டது. நேற்று ஒரு நாளில் திருப்பூரில் மட்டும் 500 கோடி ரூபாய் வர்த்தகம் பாதித்ததாகதெரிவித்தனர்.

திருப்பூரை பொருத்தவரை மூலப் பொருட்கள்விலையேற்றும் காரணமாக தொழில் நலிவடைந்து வந்த நிலையில்மின்வாரியத்தின் நிலை கட்டணம் மற்றும் பரபரப்பு நேர கட்டணம் காரணமாக தொழிலை நடத்த முடியாத நிலைக்கு தள்ளப்பட்டு இருப்பதாகவும் , தமிழக முதல்வர் இதனை கவனத்தில் கொள்ளவில்லைஎன்றால் திருப்பூரில் தொழில்துறை மிகவும் நலிவடையும் எனவும் தெரிவித்தனர்.

இது குறித்து தமிழக அரசின் கவனத்துக்கு கொண்டு சென்ற நிலையிலும் தங்கள் கோரிக்கைகள் ஏற்கப்படவில்லை எனில் தொடர்ந்து போராட்டங்கள் நடத்தப்படும் எனவும் தெரிவித்தனர். இந்நிலையில் நேற்றைய தினம் சென்னை ஆழ்வார்பேட்டையில் தமிழகமுதல்வர்ஸ்டாலின் இல்லத்தில் அவருடன் அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, தா.மோ. அன்பரசு ஆகியோர் ஆலோசனையிலும் ஈடுபட்டனர்,

அதிமுக - பாஜக கூட்டணி முறிந்தது இபிஎஸ் தலைமையிலான கூட்டத்தில் அதிகாரபூர்வ

# அறிவிப்பு

## பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்து அதிமுக விலகிக் கொள்கிறது மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது : கே.பி.முனுசாமி

சென்னை, செப். 26–

சென்னை ராயப்பேட்டையில் உள்ள அதிமுக தலைமை அலுவலகத்தில் அக்கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் மாவட்ட செயலாளர்கள், எம்.எல்.ஏக்கள் கூட்டம் நேற்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், மாவட்டச் செயலாளர்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சியின் தலைமைக் குழு உறுப்பினர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். இக்கூட்டத்துக்குப் பின்னர், அதிமுக முன்னாள் அமைச்சர் கே.பி.முனுசாமி செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியது: "அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் நடைபெற்ற மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில், தலைமைக்கழக நிர்வாகிகள், மாவட்டச் செயலாளர்கள், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களின் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.



இந்தக் கூட்டத்தில், ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அந்தத் தீர்மானம் பின்வருமாறு: தேசிய ஜனநாயக கூட்டணியில் உள்ள, பாஜகவின் மாநிலத் தலைமை, கடந்த ஒரு வருட காலமாக திட்டமிட்டே, வேண்டுமென்றே உள்நோக்கத்தோடு அதிமுக மீதும், எங்களுடைய கட்சியின் தெய்வங்களான பேரறிஞர் அண்ணா, மறைந்த முதல்வர் ஜெயலலிதா குறித்து அவதூறாக பேசியும், எங்கள் கொள்கைகளை விமர்சித்தும் வருகிறது.

மேலும், பாஜகவின் மாநிலத் தலைமை கடந்த 20.08.2023 அன்று மதுரையில் நடைபெற்ற வரலாற்று சிறப்புமிக்க அதிமுக வீரவரலாற்றின் பொன்விழா எழுச்சி மாநாட்டை சிறுமைப்படுத்தியும், இரண்டு கோடிக்கும் மேற்பட்ட தொண்டர்களை வழிநடத்தும் எங்கள் கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி பற்றி அவதூறாக விமர்சித்தும் வருகிறது. இந்தச் செயல் கட்சித் தொண்டர்கள் மற்றும் நிர்வாகிகள் மத்தியில் கொந்தளிப்பான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், தலைமைக் கழகத்தின் எம்ஜிஆர் மாளிகையில் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் நடைபெற்ற தலைமைக் கழகச் செயலாளர்கள், மாவட்ட செயலாளர்கள், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டத்தில், இரண்டு கோடிக்கும் மேற்பட்ட தொண்டர்களின் எண்ணத்துக்கும், விருப்பத்துக்கும், உணர்வுகளுக்கும் மதிப்பளித்து, அதிமுக இன்று {செப்டம்பர்-25} முதல் பாஜகவிலிருந்தும், தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்தும் விலகிக் கொள்கிறது என்ற ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது. வருகின்ற 2024-ல், நடைபெற இருக்கின்ற நாடாளுமன்றத் தேர்தலில் அதிமுக தலைமையில், கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில், மற்ற கட்சிகளின் கூட்டணியுடன் தேர்தலை சந்திக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்" என்று அவர் கூறினார்.

முன்னதாக, எடப்பாடி பழனிசாமி தலைமையில் நடந்த ஆலோசனைக்கூட்டத்தில் கலந்துகொண்ட பெரும்பாலான உறுப்பினர்கள், பாஜக கூட்டணியில் இருந்து விலக வலியுறுத்தினர். கே.பி.முனுசாமி தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்து விலகுவதாக அறிவித்தபோது, கட்சி அலுவலகத்தில் திரண்டிருந்த அதிமுக தொண்டர்கள் பட்டாசுகள் வெடித்தும், இனிப்புகள் வழங்கியும் தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

தமிழகத்தில் 2019 மக்களவைத்தேர்தல் மற்றும் 2021 சட்டப்பேரவைத் தேர்தல் ஆகியவற்றை அதிமுகவுடன் பாஜக கூட்டணி அமைத்து சந்தித்தது. 2024 மக்களவைத் தேர்தலிலும் கூட்டணி தொடரும் என்று இரு கட்சிகளும் அறிவித்திருந்தன.

மக்களவைத் தேர்தல் நெருங்கிவரும் நிலையில், நாடுமுழுவதும் அனைத்துக் கட்சிகளும் தேர்தலுக்குத் தயாராகி வருகின்றன. தேசிய அளவில் காங்கிரஸ் தலைமையிலான இண்டியா கூட்டணி அவ்வப்போது கூட்டணி கட்சித் தலைவர்கள் பங்கேற்கும் கூட்டங்களை நடத்தி, முக்கிய முடிவுகளை எடுத்து வருகின்றன. அதை எதிர்கொள்ள பாஜகவும் தனது கூட்டணிக் கட்சி நிர்வாகிகளை அவ்வப்போது அழைத்து பேசி வருகிறது. அவ்வாறு கடந்த 14-ம் தேதி அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமியை, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா அழைத்து பேசியுள்ளார்.

பாஜக தேசிய தலைமையின் அழைப்பை ஏற்று, அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி கடந்த 14-ம் தேதி டெல்லி சென்றார். அங்கு மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவை சந்தித்தார். இந்த சந்திப்பின்போது, சுமார் 20 தொகுதிகளில் பாஜக மற்றும் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகள் போட்டியிட விருப்பம் தெரிவித்ததாகவும், முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், அமமுக பொதுச் செயலாளர் டி.டி.வி. தினகரன் ஆகியோரை கூட்டணியில் சேர்த்துக்கொள்ள விரும்புவதாகவும் அமித் ஷா கூறியதாக கூறப்படுகிறது. ஆனால், இந்த நிபந்தனைகளை பழனிசாமி ஏற்கவில்லை என்று தெரிகிறது.

இதன் தொடர்ச்சியாக, பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை, ஜெயலலிதா, அண்ணா போன்ற தலைவர்களை, கூட்டணி தர்மத்தை மீறி விமர்சித்து வருவதாக கூறி, பாஜகவுடன் கூட்டணி இல்லை என அதிமுக சார்பில் அறிவிக்கப்பட்டது. அண்ணா குறித்து தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை விமர்சித்த நிலையில், அதற்கு அதிமுக முன்னாள் அமைச்சர்கள் டி.ஜெயக்குமார், சி.வி. சண்முகம், செல்லூர் ராஜு உள்ளிட்டோர் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். தொடர்ந்து, பாஜகவுடன் கூட்டணி இல்லை என்று ஜெயக்குமார் கடந்த 18-ம் தேதி தெரிவித்தார்.

தொடர்ந்து, அதிமுக மூத்த நிர்வாகிகள் டெல்லி சென்று பாஜக தேசியத் தலைவர் ஜே.பி.நட்டாவை சந்தித்து பேசியது, அரசியல் வட்டாரங்களில் பரபரப்பை ஏற்படுத்தியது. அதிமுக எம்.பி., எம்எல்ஏக்கள் கடந்த 22-ம் தேதி டெல்லி சென்று, பாஜக தேசியத் தலைவர் ஜே.பி.நட்டாவை சந்தித்து, அண்ணாமலையின் பதவியை பறிக்க வலியுறுத்தியதாகவும், அதை அவர் ஏற்க மறுத்ததாகவும் கூறப்படுகிறது.

இந்த பரபரப்பான சூழலில் சென்னை ராயப்பேட்டையில் உள்ள அதிமுக தலைமை அலுவலகத்தில், பொதுச் செயலாளர் பழனிசாமி தலைமையில் மாவட்ட செயலாளர்கள், தலைமைக் கழக செயலாளர்கள், எம்.பி., எம்எல்ஏக்கள் பங்கேற்கும் ஆலோசனை கூட்டம் நேற்று மாலை நடைபெற்றது. இதில், பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்து அதிமுக விலகிக் கொள்வதாக அறிவிக்கப்பட்டது.



▶ புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், கைக்குறிச்சி, ஸ்ரீ பாரதி மகளிர் பொறியியல் கல்லூரியில், முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, மாபெரும் சிறப்பு கல்வி கடன் முகாமினை, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் நேற்று துவக்கி வைத்து, கல்வி கடன் பெறுவதற்கான ஆணைகளை மாணவர்களுக்கு வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் மெர்சி ரம்யா, மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் ஆனந்த், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

## "கட்சிக்காக உழைத்ததால் நல்ல வாய்ப்பு" புதுச்சேரி மாநில புதிய பாஜக தலைவர் செல்வகணபதி

புதுச்சேரி , செப். 26–

பாஜக புதுச்சேரி மாநிலத்தின் புதிய தலைவராக தற்போதைய கட்சியின் மாநிலப் பொருளாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான செல்வகணபதி நியமிக்கப்பட்டுள்ளார்.



புதுவை மாநிலத்தின் பாஜக தலைவராக முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினரான சாமிநாதன் கடந்த 2015-ஆம் ஆண்டு டிசம்பரிலிருந்து செயல்பட்டு வந்தார். நாட்டிலேயே அதிகபட்சமாக மாநிலத் தலைவராக 8 ஆண்டுகள் வரை இப்பொறுப்பில் இருந்தார். வழக்கமாக 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை மாநிலத் தலைவர் மாற்றம் இருப்பது வழக்கம். ஆனால், அதிகளவாக இப்பதவியை அவர் வகித்து வந்தார். மாநிலத் தலைவர் பதவிக்கு பலரும் முயற்சித்து வந்தனர்.

இந்தநிலையில், பாஜக புதுச்சேரி மாநிலத்தின் புதிய தலைவராக தற்போதைய கட்சியின் மாநிலப் பொருளாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான செல்வகணபதி நியமிக்கப்பட்டுள்ளார். அவரை புதுவை மாநில பாஜக தலைவராக அறிவித்து கட்சியின் தேசியத் தலைவர் நட்டா நேற்று அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

கல்வியாளரான செல்வகணபதி எம்.பி., ஆர்எஸ்எஸ் வட்டாரங்களில் நெருக்கமானவர். ஏற்கெனவே பாஜக நியமன எம்.எல்.ஏ.வாக இருந்துள்ளார். அதைத் தொடர்ந்து தற்போது மாநிலங்களவை உறுப்பினராக உள்ளார். தற்போது மாநிலத் தலைவராகியுள்ளார்.

புதுவை மாநிலக் காங்கிரஸ் தலைவராக இருந்த ஏ.வி. சுப்பிரமணியன் கடந்த சில மாதங்களுக்கு முன்பு மாற்றப்பட்டு அக்கட்சியின் புதுவை மக்களவை உறுப்பினரான (எம்.பி.) வைத்திலிங்கம் கட்சித் தலைவராக நியமிக்கப்பட்டார். இந்த நிலையில், தேசியக் கட்சியான பாஜகவிலும் எம்.பி.யாக உள்ள செல்வகணபதியே தலைவராக நியமிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

புதிய பொறுப்பு தொடர்பாக எம்.பி.செல்வகணபதியிடம் கேட்டதற்கு, "நாடாளுமன்றத் தேர்தல் வரவுள்ளது. மக்களவைத் தேர்தலில் பாஜக போட்டியிட விருப்பம் உள்ளது. தேசியக் கட்சித் தலைவர்கள்தான் இறுதி முடிவு எடுப்பார்கள். பாஜகவைப் பொறுத்தவரை கட்சிக்காக உழைத்தோருக்கு நல்ல வாய்ப்பு அளிக்கும். அதற்கு நானே உதாரணம். முதலில் எம்எல்ஏ, பிறகு எம்.பி தற்போது மாநிலத் தலைவர் பதவியை பாஜக தலைமை தந்துள்ளது. பாஜகவில் இரு பதவி தருவது வழக்கம்தான். ஏற்கெனவே தேசியத் தலைவர் நட்டா உதாரணம்.

பாதயாத்திரை, கூட்டங்கள் என கட்சி வளர்ச்சிக்கு முயற்சி எடுப்பேன். மூத்தத் தலைவர்கள் யோசனையும் வளர்ச்சியையும் கட்சி வளர்ச்சிக்கு பயன்படுத்துவேன். தகுதிக்கு ஏற்ப பொறுப்புகளும் தர நடவடிக்கை எடுக்கப்படும். வாரியத் தலைவர் பதவிகளை எம்எல்ஏக்களுக்கு தருவதை முதல்வர், அமைச்சர்கள் ஒன்று கூடி முடிவு எடுக்கவேண்டும். தேர்தலுக்கு முன்போ, பின்போ முடிவு எடுக்கப்படும். தகுதியானோருக்கு தரப்படும். தேர்தலுக்கு முன்பாக பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித் ஷா ஆகியோர் புதுச்சேரி வருவார்கள். மக்களவைத் தேர்தலில் பாஜக வேட்பாளரோ, தேசிய ஜனநாயகக் கூட்டணி வேட்பாளராக இருப்பார்" என்று குறிப்பிட்டார்.

இந்நிலையில், மாநிலத் தலைவராக இருந்த சாமிநாதன் கூறுகையில், "புதியத் தலைவருக்கு வாழ்த்துகள். கடந்த டிசம்பர் 2015 முதல் தற்போது வரை மாநிலத் தலைவராக பதவி ஏற்று கட்சி வளர்ச்சியில் முழு பங்கெடுத்து வருகிறோம். கட்சி வளர்ச்சிக்கு என்னுடன் இணைந்து பணியாற்றிய கட்சி நிர்வாகிகளுக்கும், தொண்டர்களுக்கும் நன்றி. எதிர்காலத்தில் கட்சி வளர்ச்சிக்காக அனைவரும் பாடுபட்டு புதியத் தலைவருக்கு ஒத்துழைப்பு தர வேண்டும்" என்றார்.

## அரசு புறம்போக்கு நிலத்தில் அனுமதியின்றி வெடிவைத்து பாறைகள் எடுப்பதால் விவசாய பணிகள் முற்றிலும் பாதிப்பு

புதுக்கோட்டை, செப். 26–

புதுக்கோட்டை மாவட்டத்தில் அரசு புறம்போக்கு நிலத்தில் அரசு அனுமதியின்றி வெடிவைத்து பாறைகள் எடுப்பதால் வீடுகள் மட்டுமின்றி விவசாயக் கிணறுகளும் பாதிக்கப்படும் சூழல் தொடர்கதையாகி வருவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.





இது குறித்து புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தாலுகா, நக்கீரர்வயல், மேலூர் கிராமத்தைச் சேர்ந்த தீத்தப்பன் என்பவரின் மகன் கணேசன் புதுக்கோட்டை மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் அளித்த மனுவில் கூறியிருப்பதாவது:

மேற்கண்ட முகவரியில் வசித்து வரும் நான் எனக்கு சொந்தமான தோட்டத்தில் கால்நடைகள் வைத்து பராமரித்து வருகிறேன். இந்த நிலையில் மேலூர் கிராமத்தில் இயங்கி வரும் சுமார் 35 ஏக்கர் அரசு புறம்போக்கு பாறைகளில் அரசு உரிமம் எதுவுமே பெறாமல் திருட்டுத்தனமாக தினமும் நூற்றுக்கணக்கான வாகனங்களில் கருங்கல் மற்றும் சக்கை உள்ளிட்டவற்றை எடுத்துச் செல்கின்றனர். இதற்கு அதிகாரிகள் துணை போவது அனைவருக்கும் நன்கு தெரியும்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக அரசு அனுமதி காலக்கெடு முடிந்து விட்டது. அரசு அதிகாரிகளை கையில் வைத்துக்கொண்டு சில புரோக்கர்கள் இது போன்ற பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். நூற்றுக்கணக்கான வெடிகளை ஒரே நேரத்தில் வைத்து தகர்ப்பதால் வீடுகளில் கடும் அதிர்வு ஏற்படுகின்றது.

கிணறுகளில் நீர்மட்டமும் வெகுவாக குறைகின்றது. கிணறுகளில் வெடிப்பு ஏற்பட்டு கிணறுகளும் மூழ்கும் சூழல் ஏற்படுகின்றது. வீடுகளில் குழந்தைகளை வைத்து குடியிருக்க முடியவில்லை கடந்த 11 மாதமாக தொடர்ந்து மனுக்களை அளித்து வருகின்றேன் மாவட்ட நிர்வாகம் இதில் கவனம் செலுத்த மறுப்பது ஏன் என்று தெரியவில்லை இதே நிலை நீடித்தால் பெரிய அசம்பாவிதம் ஏற்படும் என்பதில் மாற்று கருத்து இல்லை ஆகையால் மாவட்ட ஆட்சித் தலைவர் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்வதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




'ஊழல் இல்லா ஆட்சி, ஈராண்டே சாட்சி' என முதல்வர் பெருமிதத்துடன் கூறி வந்தாலும் டாஸ்மாக்கில் மது பாட்டில் ஒன்றுக்கு 10 ரூபாய் பிச்சைக்காரர்களையும் விட்டு வைக்காமல் பிச்சை எடுக்கும் சம்பவம் தொடர்கின்றது

புதுக்கோட்டை மாவட்டத்தில் நாள் ஒன்றுக்கு சராசரியாக 15 லட்சம் ரூபாய் அதிகாரிகளின் கையாலாகாத தனத்தால் டாஸ்மாக் பணியாளர்கள் லஞ்சமாக வசூலிக்கின்றனர்

லஞ்ச ஒழிப்புத்துறை, வருமான வரித்துறை, மாவட்ட கலெக்டர், எஸ்பி, எவர் இருந்தும் ஒன்றும் பிரயோஜனம் இல்லை

புதுகை வரலாறு நாளிதழ்

### சென்னை மணலியில் புதியதாக கட்டப்பட்ட

## தொடக்கப் பள்ளி கட்டிடத்தை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி திறந்து வைத்தார்



சென்னை, செப்,26-

சென்னை மணலி பாடசாலை தெருவில் உள்ள மாநகராட்சி தொடக்கப்பள்ளி உள்ளது இப்பள்ளியில் 1000 க்கும் மேற்பட்ட பள்ளி மாணவர்கள் படித்து வருகின்றனர்.

பள்ளி வகுப்பறைகள் சிதிலமடைந்து காணப்பட்டு சிமெண்ட் பூச்சுகள் இடிந்து விழுந்தன இதனால் பள்ளி வகுப்பறையில் மாணவர்கள் படிக்க சிரமத்திற்கு ஆளாகினர் இதனையடுத்து தொடக்கப் பள்ளி தலைமை ஆசிரியர் கோமளீஸ்வரி வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமியிடம் பள்ளிக்கு கூடுதல் கட்டிடம் கட்டித்தர கோரிக்கை வைத்தார்.

அவரது கோரிக்கையை ஏற்று வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஒரு கோடியே 90 ரூபாய் லட்சம் செலவில் புதியதாக ஐந்தாயிரம் சதுர அடி பரப்பில் இரண்டு அடுக்குமாடிகளைக் கொண்ட ஆறு வகுப்பறைகள் கட்டி முடிக்கப்பட்டன.

மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் கூடுதல் வகுப்பறைகளை வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி ரிப்பன் வெட்டி குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார் வகுப்பறைக்கு உள்ளே செல்லும் வழியில் விமானம் போன்று வரையப்பட்டுள்ளது மாணவிகளை மகிழ்ச்சியில் ஏற்படுத்தி உள்ளது.

வகுப்பறைகள் முழுவதுமே அறிவியல் கணிதம், வரலாறு, சந்திராயன் ராக்கெட், நாட்டுப்பற்று என கண் கவரும் ஓவியங்களாக வரையப்பட்டுள்ளது இதனை அடுத்து மாணவிகள் தமிழ்நாடு முதலமைச்சரின் திட்டங்கள் குறித்து பாடலாக பாடினர்.

நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் கே. பி. சங்கர், மாதவரம் சுதர்சனம் மண்டல குழுத் தலைவர் ஆறுமுகம் சென்னை மாநகராட்சி வடக்கு மண்டல ஆணையர் சிவகுருபிரபாகரன் திருவொற்றியூர் மேற்கு பகுதி செயலாளர் வை.ம அருள்தாசன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.



எஸ்.பி.பாலசுப்ரமணியனின் 3-ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நேற்று திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், தாமரைப்பாக்கம் ஊராட்சியில் உள்ள அவரது நினைவிடத்தை மலர்களால் அலங்கரித்து வைத்திருந்தனர்.இங்கு அவரது மகன் எஸ்.பி.பி.சரண் மற்றும் அவரது குடும்பத்தினர், ரசிகர்கள் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

### சிஐடியு ஆட்டோ ஓட்டுநர் சங்கம் மற்றும்

## ஸ்கார்ப் இந்தியா மருத்துவமனை இணைந்து நடத்திய மனநல விழிப்புணர்வு நிகழ்ச்சி



மதுராந்தகம், செப்,26-

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம்பேருந்துநிலையம் எதிரே உலக அல்சைமர் மாதத்தை முன்னிட்டு சிஐடியு ஆட்டோஓட்டுநர் சங்கம் மற்றும் ஸ்காரஸ்கார்ப் இந்தியா மனநல மருத்துவமனை மருத்துவர் ஸ்ரீதர் வைத்தீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக செங்கல்பட்டு மாவட்ட மனநல மருத்துவர் சசி பிரியா மற்றும் சிஐடியு தொழிலாளர் சங்கத் தலைவர் செங்கல்பட்டு மாசிலாமணி ஆகியோர் கலந்து கொண்டு மனநல விழிப்புணர்வு நிகழ்ச்சியை துவக்கி வைத்தனர்.

விழிப்புணர்வு நிகழ்ச்சியில் ஸ்கார்ப் இந்தியா மருத்துவமனை ஊழியர்கள் மனநோய் மற்றும் ஞாபக மறதி நோய் குறித்து குழு நாடகம் மூலம் விழிப்புணர்வு அளிக்கப்பட்டது. இந்த மனநல விழிப்புணர்வு நிகழ்ச்சியில் ஒருங்கிணைப்பாளர் குழந்தை இயேசு, பிரபு மற்றும் தன்னார்வலர்கள் பொதுமக்கள் ஆட்டோ ஓட்டுநர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### போரூர் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில்

## கூடுதலாக கட்டப்பட்ட 12 வகுப்பறைகள் திறப்பு விழா



சென்னை, செப்,26-

சென்னை, மதுரவாயல் சட்டமன்ற தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி. மண்டலம்-11ல், 151 வது வார்டுக்கு உட்பட்ட அரசு மகளிர் மேல்நிலை பள்ளியில் தனியார் நிறுவனம் ( RMZ) மூலம் ரூ.2.60 கோடி மதிப்பீட்டில் கூடுதல் வகுப்பறை கட்டிடம் மற்றும் 155 வார்டில் சட்ட மன்ற உறுப்பினர் மேம்பாடு நிதி ரூ.82 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறை கட்டிட திறப்பு விழா சின்ன போரூர் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.

மதுரவாயல் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், திருபெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினரும் கழக பொருளாளருமான டி.ஆர்..பாலு, திமுக-வின் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சருமான மா.சுப்பிரமணியன், பள்ளிக் கல்வி துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்துகொண்டு பள்ளி கட்டிடத்தினை திறந்துவைத்து, குத்துவிளக்கேற்றி, பள்ளி கட்டடத்தை மாணவர்கள் பயன்பாட்டிற்காக தொடங்கி வைத்தனர்.

இந்த நிகழ்ச்சியில், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் எஸ்.மார்ஸ், மாவட்ட கல்வி அலுவலர் முருகன், சின்ன போரூர் அரசு மகளிர் மேல்நிலை பள்ளி தலைமை ஆசிரியர் சீ.சாந்தாலட்சுமி, உதவி தலைமை ஆசிரியர் ந.கவிதா, திமுக-வின் மதுரவாயல் மேற்கு பகுதி கழக செயலாளர் மற்றும் 11வது மண்டலக் குழு தலைவர் நொளம்பூர் வே.ராஜன், அயப்பாக்கம் ஊராட்சி மன்றத் தலைவர் மற்றும் செயல் அலுவலர் அ.ம.துரைவீரமணி, மதுரவாயல் சட்ட மன்ற தொகுதிக்குட்பட்ட பகுதி, ஒன்றிய கழக நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், வட்ட கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், பிற அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள், வட்ட கழக, கிளைக்கழக நிர்வாகிகள், அணிகளின் பகுதி, வட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் மற்றும் தமிழக அரசின் பள்ளிக் கல்வி துறை அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### புதுச்சேரி அரசு நலவழித்துறை" காரைக்கால் மாவட்டத்தில்

## டெங்கு காய்ச்சலை தடுக்கும் பொருட்டு பள்ளி கல்லூரி மாணவர்களுக்கு டெங்கு விழிப்புணர்வு



காரைக்கால், செப்.26-

புதுச்சேரி அரசு நலவழித்துறை" காரைக்கால் மாவட்டத்தில் டெங்கு காய்ச்சலை தடுக்கும் பொருட்டு பள்ளி கல்லூரி மாணவர்களுக்கு டெங்கு விழிப்புணர்வு வகுப்புகள் நலவழித்துறையின் வழியாக நடத்தப்படுகிறது.

காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோந்துங்கன் , டெங்கு விழிப்புணர்வு பிரச்சாரத்தை பள்ளி கல்லூரி மாணவ மாணவியர்களுக்கு அதிகமாக எடுத்துச்செல்ல வேண்டும் என்று கேட்டுக்கொண்டார் அதனை தொடர்ந்து நலவழித்துறையின் மூலம் ஒவ்வொரு ஆரம்பசுகாதார நிலையத்திற்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள பள்ளி கல்லூரிகளில் டெங்கு விழிப்புணர்வு வகுப்புகளும், முகாம்களும் நடத்தப்பட்டு வருகின்றது.

அதனை தொடர்ந்து நேற்று நிரவி காவேரி பப்ளிக் பள்ளிக்கு நலவழித்துறை துணை இயக்குனர் டாக்டர் .சிவராஜ்குமார் , நோய் தடுப்பு திட்ட ஒருங்கிணைப்பாளர் டாக்டர்.தேனாம்பிகை , டெங்கு காய்ச்சல் பற்றிய விழிப்புணர்வு பற்றியும் கொசு ஒழிப்பில் மாணவர்களின் பங்களிப்பை பற்றியும் சிறப்பு வகுப்பு நடத்தினர்.

இந்த விழிப்புணர்வு பிரச்சார நிகழ்ச்சியில் கொசு மற்றும்பூச்சிகளால்பரவும்நோய் தடுப்புதிட்டத்தின்தொழில்நுட்ப உதவியாளர் சீ.சேகர் , சுகாதார ஆய்வாளர் சிவவடிவேல் கலந்துக்கொண்டு பள்ளி வளாகத்தில் டெங்கு புழுக்கள் இருக்கின்றதா, தண்ணீர் தேங்கக் கூடிய பயணற்ற பொருட்கள் உள்ளதா என்று ஆய்வு செய்தனர்

## ஆரணியில் விநாயகர் சதுர்த்தியை கொண்டாடும் வகையில் சகா சிலம்பக்கூட மாணவர்களின் சிலம்ப நிகழ்ச்சி நடைபெற்றது



ஊத்துக்கோட்டை, செப்26-

நாடு முழுவதும் கடந்த திங்கட்கிழமை முதல் விநாயகர் சதுர்த்தி விழாவை கொண்டாடி வருகின்றனர். பல்வேறு வடிவங்களில் விநாயகர் சிலையை வைத்து பொதுமக்கள் தங்களால் இயன்ற அளவில் ஆங்காங்கே சிறப்பான முறையில் வழிபாடுகளை நடத்தி வருகின்றனர்.

மேலும், விநாயகர் சதுர்த்தியின் மூன்றாவது நாளான புதன்கிழமை ஒரு சில இடங்களில் அந்த விநாயகர் சிலையை நீர் நிலைகளில் கொண்டு சென்று கரைத்தனர். மேலும்,பல்வேறு இடங்களில் ஏழாவது நாளான ஞாயிற்றுக்கிழமை நீர் நிலைகளில் கரைத்தனர். இந்நிலையில், இவ்வாறு வைக்கப்பட்ட சிலைகளுக்கு நாள்தோறும் பூஜைகளை செய்து தங்களால் முடிந்த அன்னதானத்தை விழா குழுவினர்கள் செய்தனர்.

இந்நிலையில், திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், ஆரணி மச்சத்தெருவில், பிஞ்சலார் தெரு சந்திப்பில் விநாயகர் சிலையை வைத்து விழா குழுவினர்கள் நாள்தோறும் பூஜைகளை செய்து அன்னதானம் வழங்கின்றனர்.

இந்நிலையில்,5-வது நாளான வெள்ளிக்கிழமை இரவு சகா சிலம்பக்கூட மாணவர்கள் சிலம்ப கலை நிகழ்ச்சியை சிலம்ப ஆசான் கோபி முன்னிலையில் சிறப்பான முறையில் செய்து காண்பித்தனர்.

இதன் பின்னர், இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மாணவர்களுக்கு சகா சிலம்ப தலைவர் ராஜேந்திரன் தலைமையில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட பி.வி. டி டெக்ஸ்டைல்ஸ் உரிமையாளர் தொழிலதிபர் பி.தியாகராஜன் இம்மாணவர்களுக்கு பரிசு வழங்கி பாராட்டினார். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை விழா குழுவினர்களும், பொதுமக்களும் சிறப்பாக செய்திருந்தனர்.

## ஆவுடையார்கோவில் அருகே வேள்வரை ஸ்ரீ ஐந்து வேம்பு காளியம்மன் கோவில் திருவிழாவை முன்னிட்டு மாட்டுவண்டி எல்கை பந்தையம்



ஆவுடையார்கோவில், செப்.26-

புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார் கோவில் தாலுகா மீமிசல் அருகே வேள்வரை ஸ்ரீ ஐந்து வேம்பு காளியம்மன் கோவில் திருவிழாவை முன்னிட்டு 4-வது ஆண்டாக நடைபெற்ற பந்தயத்தில் புதுக்கோட்டை, மயிலாடுதுறை,தஞ்சை, நாகை,சிவகங்கை உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலிருந்து 45ஜோடி மாடுகள் போட்டியில் பங்கேற்றன.

2 பிரிவுகளாக நடைபெற்ற பந்தையத்தில் பெரிய மாடு பிரிவில் 10ஜோடி மாடுகளும், சிறிய மாடு பிரிவில் 35ஜோடி மாடுகளும் போட்டியில் கலந்து கொண்டு சீரிப்பாய்ந்தன. மேலும் மாடுகளை சிறப்பாக ஓட்டி வந்த சாரதிகளுக்கு கொடிப்பரிசு மற்றும் சிறப்பு பரிசுகள் வழங்கப்பட்டது.சாலையின் இருபுறத்திலும் ரசிகர்கள் திரண்டிருந்து பந்தையத்தை கண்டு ரசித்தனர், மீமிசல் காவல்த்துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.



தென்காசி மாவட்டம் கடையநல்லூரில் சவுதி அரேபியா புரட்சித்தலைவி அம்மா பேரவைத் தலைவர் காட்டுமன்னார்கோவில் அன்பழகனை, கடையநல்லூர் அம்மா பேரவை செயலாளர் எஸ். எம். மைதீன் வரவேற்றார், ஜஹான்மக்தூம் ஞானியர் பெரிய பள்ளிவாசல், காதர் மைதீன் பெரிய குப்தா பள்ளிவாசல், பண்பொழி திருமலை குமாரசுவாமி முருகன் கோவிலுக்கும் அழைத்துச் சென்று சாமி தரிசனம் செய்தனர். மேலும் சவுதி அரேபியா நாட்டின் புனித தலமான மெக்காவின் புனித நீர் ஜம் ஜம்நீர், பேரிச்சம்பழம் கொடுத்தும் வரும் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் முன்னாள் முதல்வர் எடப்பாடி கே.பழனிச்சாமி மீண்டும் அரியணை ஏற வேண்டி புனித தலங்களுக்குச் சென்று பிரார்த்தனை செய்தனர்.



மதுரை பழங்காநத்தம் ரவுண்டானா அருகில் தமிழ்நாடு தொழில்துறை மின் நுகர்வோர்கள் கூட்டமைப்பு சார்பாக மின் கட்டண உயர்வை குறைக்க வலுவிறுத்தி, முதல்வர் கவனத்தை ஈர்க்க தமிழ்நாடு முழுவதும் தொழிற்சாலை உற்பத்தியை ஒருநாள் நிறுத்தி உண்ணாவிரதப் போராட்டம், காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை உண்ணாவிரத போராட்டம் நடைபெறுகிறது. இந்த போராட்டத்தில் 430 சதவீதம் உயர்த்திய நிலை கட்டணத்தை திரும்ப பெறவும், சோலார் மேற்கூரை நெட்வொர்க் கட்டணத்தை ரத்து செய்யவும் மற்றும் இரண்டு ஆண்டுகளுக்கு மின் கட்டணத்தை உயர்த்துவதை தவிர்க்க வேண்டியும், மேலும் பல கோரிக்கைகளை கோஷமிட்டு வலியுறுத்தினர். இதில் மதுரை நிப்பான் பர்னிச்சர் மற்றும் சன் பிரஸ்ஸிங் உரிமையாளர் நிப்பான் தனுஷ்கோடி,ஹரிகிருஷ்ணா டிரேடர்ஸ் உரிமையாளர் சிவலிங்கம் மற்றும் தொழிலதிபர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் மூலம் மாதந்தோறும் ரூ.1000/- பெற்றுள்ள மகளிர் முதல்வருக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொண்டனர்




**புதுக்கோட்டை, செப்.26-**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஏழை, எளிய பொதுமக்களின் வாழ்வில் மிகுந்த அக்கறைகொண்டு பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார். அந்தவகையில் மகளிருக்கென தனித்துவமான திட்டங்களை செயல்படுத்தி இந்தியாவிற்கே முன்னுதாரணமாக தமிழகத்தை திகழச் செய்கிறார். அதன்படி, நகரப்பேருந்துகளில் மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து பயணம், புதுமைப் பெண் திட்டம் உள்ளிட்ட பல்வேறு மகளிர் திட்டங்களுடன் தற்போது குடும்பத் தலைவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1000- வழங்கிடும் 'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்" பேரறிஞர் அண்ணா பிறந்தநாளான 15.09.2023 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

**திட்டம்குறித்துபுதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது:**

தமிழ்நாடு அரசின் 2023-24ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், 'மகளிருக்குச் சொத்துரிமையும், உள்ளாட்சி அமைப்புகளில் தனி இடஒதுக்கீடு அளித்தது முதல், தற்போது கட்டணமில்லாப் பேருந்து பயணம் வழங்கியது வரை, மகளிரின் நலன் காத்து அவர்களது உரிமைகளை நிலைநாட்டுவதில் எப்போதும் அக்கறையுடன் இவ்வரசு செயல்பட்டு வருகிறது. அந்த வரிசையில் குடும்பத் தலைவிகளுக்கு மாதம் 1,000 ரூபாய் வழங்கப்படும் என்ற தேர்தல் வாக்குறுதியில் அறிவித்தபடி, தகுதிவாய்ந்த குடும்பங்களின் குடும்பத் தலைவிகளுக்கு வரும் நிதியாண்டில் மாதம் 1,000 ரூபாய் உரிமைத் தொகையாக வழங்கப்படும். வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தத் திட்டம் கலைஞர் நூற்றாண்டான இந்த ஆண்டில், திராவிட இயக்க மாதம் என சொல்லத்தக்க செப்டம்பர் மாதத்தில், தாய் தமிழ்நாட்டின் தலைமகன் - பேரறிஞர் பெருமகன் அறிஞர் அண்ணா பிறந்தநாளான செப்டம்பர் மாதம் 15 ஆம் நாள் முதலமைச்சரால் தொடங்கி வைக்கப்படும்" என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, 15.09.2023 அன்று காஞ்சிபுரம், பச்சையப்பன் ஆடவர் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற விழாவில், மகளிர் பயன்பெறும் வகையில், மகளிருக்கு மாதந்தோறும் ரூ.1000/- வழங்கிடும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை தொடங்கி வைத்தார். அதனைத்தொடர்ந்து, புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சரும் மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சரும், மகளிருக்கு வங்கி பற்று அட்டைகளை வழங்கினார்கள். அந்த வகையில் புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டத்தில் 3,391 மகளிருக்கும் மற்றும் ஆலங்குடி வட்டத்தில் 4,431 மகளிருக்கும் என மொத்தம் 7,822 மகளிருக்கு 15.09.2023 அன்று வங்கி பற்று அட்டைகள் வழங்கப்பட்டது.

புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த மகளிர்கள் இந்த மகளிர் உரிமைத் தொகையினை பெற்றுக்கொண்டு, முதல்வருக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொண்டனர் என தெரிவித்தார்.

**வம்பன் நான்குரோடு பகுதியைச் சேர்ந்த பயனாளி தனலட்சுமி தெரிவித்ததாவது:**

நாங்கள் வம்பன் நான்குரோடு பகுதியில் வசித்து வருகிறோம். எனது கணவர் பெயர் ராஜ்மோகன். வம்பன் நான்குரோட்டில் ஜெராக்ஸ் கடை நடத்தி வருகிறார். எனது மூத்த மகன் 8ஆம் வகுப்பிலும், இளைய மகள் 1ஆம் வகுப்பும் படித்து வருகிறார்கள். நான் எனது குடும்ப வேலைகளையும், குழந்தைகளை பள்ளி அனுப்பும் பணிகளையும் மேற்கொண்டு வருகிறேன். ஜெராக்ஸ் கடை நடத்தி வருவதன் மூலம் கிடைக்கப் பெறும் வருமானம் கொண்டு குடும்ப செலவை கவனித்து வருகிறோம். மேலும் குழந்தைகளின் படிப்பு தேவைக்காகவும்,

அன்றாடம் குடும்ப செலவுகளை மேற்கொள்வதற்கும் கூடுதல் வருமான தேவைப்படும் இச்சூழ்நிலையில் நானும், எனது கணவருடன் சேர்ந்து கடைக்கு சென்று வருவேன். இதன்மூலம் எனது குடும்பத்தையும், குழந்தைகளின் படிப்பின்மீதும் கவனம் செலுத்த முடியாமல் இருந்து வந்தோம்.



திருமதி.தனலட்சுமி திருமதி.மாசிலா

இச்சூழ்நிலையில் முதலமைச்சரால் செயல்படுத்தப்படும் 'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின்கீழ்" பயன்பெறுவதற்காக மனு வழங்கி இருந்தேன். அதன்படி மாதந்தோறும் குடும்பத் தலைவிகளுக்கு ரூ.1000/- வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின்கீழ் பயன்பெறுவதற்கான வங்கி பற்று அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

இதன்மூலம் குடும்பத்தின் பொருளாதார அடிப்படையிலான சிறு, சிறு தேவைகளையும் குழந்தைகளின் படிப்பு செலவிற்கும் பயன்படுத்தி குடும்பத்தை சிறந்த முறையில் நிர்வாகம் செய்வதற்கு எங்களுக்கு வாய்ப்பு வழங்கும் வகையில் திட்டம் செயல்படுத்திய முதல்வருக்கு நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்றார்.

**மாஞ்சான்விடுதியைச் சேர்ந்த பயனாளி மாசிலா தெரிவித்ததாவது:**

எனது கணவர் முத்துகண்ணுடன் மாஞ்சான்விடுதியில் வசித்து வருகிறோம். எனது கணவர் எங்களது பகுதியிலேயே சலூன் கடை நடத்தி வருகிறார். எங்களுடைய மகளை திருமணம் முடித்து வைத்து, மகனை 12ஆம் வகுப்பு படிக்க வைத்து வருகிறோம். வயதான காலத்தில் என்னுடைய கணவரால் சரியாக சலூன் கடைக்குச் சென்று முடித் திருத்தம் செய்யும் பணிகளை சரிவர மேற்கொள்ள இயலவில்லை. மேலும் அவருக்கு கழுத்தில் சிறு கட்டி ஒன்று வந்த பிறகு அவரால் முடிதிருத்தம் செய்யும் பணிகளை முழுமையாக மேற்கொள்ள இயலவில்லை. இதன்காரணமாக எனது மகனை பள்ளிக்கு அனுப்பி சரியாக படிக்க வைப்பதற்கும், குடும்பத்தினை நடத்துவதற்கும் மிகவும் கஷ்டமாக இருந்து வந்தது. இச்சூழ்நிலையில் மகளிர் உரிமைத் திட்டத்தின்கீழ்" மாதந்தோறும் ரூ.1000/- பெறுவதற்கான வங்கி பற்று அட்டை வழங்கப்பட்டுள்ளது.

இதன்மூலமாக வயதான காலத்தில் உடல் நலமின்றி இருக்கும் எனது கணவரை கவனித்துக்கொள்வதற்கும், மகனின் படிப்பிற்கும் இத்தொகையானது மிகவும் உதவிகரமாக இருக்கும். இதன்மூலமாக எனது மகனை அவனின் கனவிற்கு ஏற்ப சிறந்த முறையில் உயர்கல்வி படிக்க வைத்து சிறப்பானதொரு எதிர்காலத்தை ஏற்படுத்திட முடியும். இத்தகைய மக்கள்நலத் திட்டங்கள் மூலம் எங்களை போன்றவர்களையும் சமுதாயத்தில் மற்றவர்களுக்கு இணையாக மதிக்கத்தக்க வகையில் உயர்ந்த நிலையினை அடைய வழிவகை செய்த நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறோம். என்றார்.

தமிழ்நாடு முதலமைச்சர் உயர்ந்த நோக்கத்தில் பல்வேறு முன்னோடித் திட்டங்களை பொதுமக்களுக்காக செயல்படுத்தி வருகிறார்கள். இத்தகைய திட்டங்களை நாம் நன்கு அறிந்துகொண்டு தங்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும் இந்த மக்கள் நலத்திட்டங்களை அனைத்தையும் நல்ல முறையில் பயன்படுத்திக்கொண்டு வாழ்வில் முன்னேற வேண்டும்.

**தொகுப்பு**
**க.பிரேமலதா, எம்.காம்., பி.ஜி.டி.சி.ஏ.,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்**
**புதுக்கோட்டை மாவட்டம்**





# அமெரிக்காவில் ஜோ பைடன் நிர்வாகத்தால் பொருளாதாரம் வீழ்ச்சி : பொதுமக்கள் கருத்து



**வாஷிங்டன் : செப். 26,**

**அமெரிக்காவில் ஜனாதிபதி ஜோ பைடன் நிர்வாகத்தால் பொருளாதாரம் வீழ்ச்சி அடைந்து விட்டதாக பொதுமக்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.**

அமெரிக்காவில் கடந்த 2021-ம் ஆண்டு முதல் ஜனாதிபதி ஜோ பைடன் (வயது 80) தலைமையிலான ஆட்சிநடைபெற்று வருகிறது. இவரது பதவிக்காலம் அடுத்த ஆண்டு நவம்பர் மாதத்துடன் முடிவடைகிறது.

இதனால் அங்கு அடுத்த ஆண்டு தேர்தலுக்கான பணிகள் தற்போதே சூடுபிடித்துள்ளன. இதற்கிடையே ஜோ பைடன் மீண்டும் ஜனாதிபதி தேர்தலில் தான் போட்டியிடுவதாக அறிவித்துள்ளார்.

அதேசமயம் குடியரசு கட்சி சார்பில் முன்னாள் ஜனாதிபதியான டொனால்ட் டிரம்பும் போட்டியிடுகிறார். இவரை தவிர சுயேச்சை வேட்பாளர்கள் பலரும் இந்த தேர்தலில் போட்டியிட வரிந்து கட்டி நிற்கின்றனர்.

இந்த நிலையில் அமெரிக்காவில் ஜோ பைடன் தலைமையிலான ஆட்சி குறித்த கருத்து கணிப்பு நடத்தப்பட்டது. இதன் முடிவுகள் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தின. இதில் சுமார் 44 சதவீதம் பேர் ஜோ பைடன் ஆட்சியில் தங்களது பொருளாதாரம் சீரழிந்து விட்டதாக கூறி உள்ளனர்.

மேலும் சுமார் 37 சதவீதம் பேர் மட்டுமே ஜனாதிபதி ஜோ பைடனின் நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டுள்ளனர். 56 சதவீதம் பேர் இவரது செயல்பாட்டை ஏற்கவில்லை என்பது தெரிய வந்துள்ளது. அதேசமயம் முன்னாள் ஜனாதிபதி டிரம்பின் நிர்வாகத்தை சுமார் 48 சதவீதம் பேர் ஏற்றுக்கொண்டுள்ளனர். இது 2021-ல் அவர் தனது பதவியை ராஜினாமா செய்தபோது இருந்ததை விட 10 சதவீதம் அதிகம் ஆகும். 74 சதவீதம் பேர் அடுத்த தேர்தலில் போட்டியிட முடியாத அளவுக்கு ஜோ பைடனுக்கு வயதாகி விட்டது என வாக்களித்துள்ளனர்.

எனவே அடுத்த ஆண்டு நடைபெற உள்ள தேர்தலில் ஜனநாயக கட்சி சார்பில் ஜோ பைடனுக்கு பதிலாக வேறு ஒருவரை நிறுத்த வேண்டும் என 62 சதவீதம் பேர் வாக்களித்துள்ளதாக அந்த கருத்து கணிப்பு கூறுகிறது. இதன் மூலம் அமெரிக்காவில் தேர்தல் களம் மேலும் சூடுபிடித்துள்ளது.

# ரஷியா–வடகொரியா ஒப்பந்தத்திற்கு பின் லாவ்ரவ் வடகொரியா பயணம்



**நியூயார்க் : செப். 26,**

**ரஷிய மற்றும் வடகொரிய தலைவர்களின் சந்திப்புக்கு பின் போடப்பட்ட ஒப்பந்தத்தின் தொடர்ச்சியாக வடகொரியாவுக்கு லாவ்ரவ் பயணம் மேற்கொள்ள உள்ளார்.**

அமெரிக்காவின் நியூயார்க் நகரில் ஐ.நா. பொது சபையின் 78-வது கூட்டத்தொடர் நடைபெற்றது. இதில், உறுப்பு நாடுகளை சேர்ந்த தலைவர்கள் கலந்து கொண்டு பேசினர். இந்த சூழலில், அமெரிக்காவின் நியூயார்க் நகரில் உள்ள ஐ.நா. தலைமையகத்தில் நடந்த பத்திரிகையாளர்கள் சந்திப்பில் ரஷிய வெளியுறவு மந்திரி செர்கே லாவ்ரவ் கலந்து கொண்டு பேசினார்.

அவர் கூறும்போது, வருகிற அக்டோபரில் வடகொரியாவுக்கு பயணம் செய்ய இருக்கிறேன். ரஷிய அதிபர் புதின் மற்றும் வடகொரிய அதிபர் கிம் ஜாங்-அன் சந்திப்புக்கு பின்னான தொடர் நடவடிக்கையாக இது இருக்கும் என கூறியுள்ளார்.

இதனால், லாவ்ரவ் பயணத்தின் போது, வடகொரியாவுக்கான புதினின் பயணம் பற்றி ஆலோசிக்கப்படும் என அரசியல் நோக்கர்கள் தெரிவித்து உள்ளனர். இதற்கேற்ப, வடகொரியாவுக்கு வருகை தரும்படி, இந்த மாத தொடக்கத்தில் புதினிடம், கிம் ஜாங்-அன் கூறினார்.

உக்ரைனுக்கு எதிராக ரஷியா கடந்த 2022-ம் ஆண்டு போர் தொடுத்தது. ஒன்றரை ஆண்டுகளாக போரானது நீடித்து வருகிறது. உக்ரைனுக்கு அமெரிக்கா, இங்கிலாந்து உள்ளிட்ட நாடுகள் ஆதரவு தெரிவித்து வருகின்றன.

இதில், ரஷியாவுக்கு எதிராக அமெரிக்கா பொருளாதார தடைகளை விதித்தது. எனினும், போரானது முடிவுக்கு வராமல் உள்ளது. இந்நிலையில், வடகொரிய அதிபர் கிம் ஜாங் அன் இந்த மாத தொடக்கத்தில் ரஷியாவுக்கு பயணம் செய்தது பரபரப்பாக பார்க்கப்பட்டது. கொரோனா பெருந்தொற்றின்போது, ரஷியாவை ஒட்டியுள்ள வடகொரியாவின் எல்லைகள் மூடப்பட்டன. பெருந்தொற்று பரவலுக்கு பின்னர், முதன்முறையாக வடகொரிய அதிபர் கிம் ஜாங் அன், ரஷியாவுக்கு இந்த மாத தொடக்கத்தில் பயணம் மேற்கொண்டார். அனைத்து கெட்ட சக்திகளையும் தண்டித்து, போரில் ரஷியா வெற்றிபெறும் என்று புதினிடம், கிம் ஜாங் அன் கூறினார்.

இதனால், இரு நாடுகளுக்கும் இடையே, ஆயுத ஒப்பந்தங்கள் நடைபெற்று இருக்க கூடும் என சந்தேகிக்கப்படுகிறது. இதனை தொடர்ந்து அமெரிக்காவும் எச்சரிக்கை விடுத்தது. வடகொரியா மற்றும் ரஷியா இடையேயான ஆயுத விற்பனைக்கு எதிராக நாங்கள் முன்பே தடைகளை விதித்து இருக்கிறோம். தேவைப்பட்டால், கூடுதல் தடைகளை விதிக்கவும் நாங்கள் தயங்கமாட்டோம் என தெரிவித்தது.

# அதிவேக இணைய சேவைக்காக 22 செயற்கைக்கோள்களை விண்ணுக்கு அனுப்பிய ஸ்பேஸ் எக்ஸ்



**வாஷிங்டன் : செப். 26,**

**அதிவேக இணைய சேவைக்காக 22 செயற்கைக்கோள்களை ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் விண்ணுக்கு அனுப்பியுள்ளது.**

அமெரிக்காவை சேர்ந்த பெரும் கோடீஸ்வரரான எலான் மஸ்குக்கு சொந்தமான ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் உலகம் முழுவதும் அதிவேக இணைய சேவையை வழங்க ஸ்டார்லிங் என்ற திட்டத்தை கடந்த 2018-ம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது.

இதற்காக தொடர்ச்சியாக ஸ்டார்லிங் செயற்கைக்கோள்களை ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் விண்ணுக்கு அனுப்பி வருகிறது. இதுவரையில் 4,500-க்கும் அதிகமான ஸ்டார்லிங் செயற்கைக்கோள்கள் புவி வட்டபாதையில் நிலைநிறுத்தப்பட்டுள்ளன.

இந்த நிலையில் மேலும் 22 ஸ்டார்லிங் செயற்கைக்கோள்களை ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் விண்ணில் செலுத்தியது. அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் உள்ள கேப் கேனவெரல் ஏவுதளத்தில் இருந்து பால்கன்-9 ராக்கெட் மூலம் ஸ்டார்லிங் செயற்கைக்கோள்கள் விண்ணுக்கு அனுப்பப்பட்டன. அவை புவி வட்டபாதையில் வெற்றிகரமாக நிலைநிறுத்தப்பட்டதாக ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் தெரிவித்தது.

# 7 ஆண்டுகளுக்கு பிறகு ஈரான்–மாலத்தீவுகள் இடையே மீண்டும் தூதரக உறவு



**டெஹ்ரான் : செப். 26,**

**7 ஆண்டுகளுக்கு பிறகு ஈரான்-மாலத்தீவுகள் இடையே மீண்டும் தூதரக உறவு தொடங்க உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**

ஈரானின் நட்பு நாடாக இருந்த மாலத்தீவுகள் சுமார் 40 ஆண்டுகள் அதனுடன் தூதரக உறவை கொண்டிருந்தது. ஆனால் மத்திய கிழக்கு நாடுகள் விவகாரத்தில் அதன் கொள்கைகள் பிராந்திய அமைதி மற்றும் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருப்பதாக மாலத்தீவு கருதியது. இதனால் கடந்த 2016-ம் ஆண்டு இரு நாடுகளும் தங்களது தூதரக உறவை முறித்துக் கொண்டன.

இந்த நிலையில் அமெரிக்காவின் நியூயார்க் நகரில் ஐ.நா.சபையின் 78-வது கூட்டத்தொடர் சமீபத்தில் நடைபெற்றது. இதில் ஈரான் வெளியுறவு மந்திரி ஹொசைன் அமீர் அப்துல்லாஹியன் மற்றும் மாலத்தீவுகள் வெளியுறவு மந்திரி அகமது கலீல் ஆகியோர் இந்த விவகாரம் குறித்து பேச்சுவார்த்தை நடத்தினர். இதில் உடன்பாடு எட்டப்பட்டதையடுத்து 7 ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும் தூதரக உறவை தொடங்குவதாக இரு நாடுகளும் அறிவித்துள்ளன. இதுகுறித்து ஈரான் வெளியுறவு அமைச்சகம் இரு நாடுகளின் நலன்கள் கருதி இந்த முடிவு எடுக்கப்பட்டதாக தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

# சுத்தமான காற்றை சுவாசிக்க வேண்டுமா – இங்கு செல்லுங்கள்



**சிட்னி : செப். 26,**

**அன்டார்டிகாவிலிருந்து எவ்விதத்திலும் அசுத்தமாகாத வேகமான காற்று, மணிக்கு 180 கிலோமீட்டர் வேகத்தில் இங்கு வந்து சேருகிறது.**

சுத்தமான காற்று, நல்ல குடிநீர், ஆரோக்கியமான உணவு மற்றும் வசிப்பதற்கு இருப்பிடம் ஆகியவைதான் மனிதனின் முதல் தேவைகள். வளங்களை குவித்து முன்னேற துடிப்பதால், பல்வேறு காரணங்களால் மனிதர்கள் இயற்கை வளங்களை அழித்து வருகின்றனர்.

இதனால் சுத்தமான காற்றை சுவாசிப்பது அரிதாகி வருகிறது. தூய்மையான காற்றுள்ள இடங்களை தேடி அலையும் மனிதர்களுக்கு உலகில் சில இடங்களே மிஞ்சியுள்ளது. ஆஸ்திரேலியா நாட்டை சேர்ந்த தீவு மாநிலம், டஸ்மேனியா. இம்மாநிலத்தின் வடமேற்கு முனையில் உள்ள தீபகற்ப பகுதி, கேப் க்ரிம். இது "உலகின் முனை" எனவும் அழைக்கப்படுகிறது.

அன்டார்டிகாவிலிருந்து எவ்விதத்திலும் அசுத்தமாகாத வேகமான காற்று, மணிக்கு 180 கிலோமீட்டர் வேகத்தில் இங்கு வந்து சேருகிறது. உலகின் பிற பகுதிகளிலிருந்து தொலைதூரம் இருப்பதாலும், சுற்றுலா பயணிகள் அறவே செல்லாத இடமென்பதாலும், பனிமலைகள் நிறைந்த தெற்கு கடற்பகுதியின் மீது பயணித்துவரும் காற்று இங்கு வந்தடைவதாலும், இங்குள்ள காற்று உலகிலேயே தூய்மையானது என காமன்வெல்த் அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி நிறுவனத்தை சேர்ந்த ஆராய்ச்சி விஞ்ஞானி டாக்டர். ஆன் ஸ்டேவர்ட் தெரிவித்துள்ளார்.

இதே போன்று உலகெங்கிலும் உள்ள பிற சுத்தமான காற்று உள்ள இடங்கள், அமெரிக்காவின் மேற்கு பகுதியில் உள்ள தீவு மாநிலமான ஹவாயில் உள்ள மௌனா லோவா, பசிபிக் கடற்பகுதியின் தென்மேற்கு பகுதியில் உள்ள மக்குவாரி தீவு, அண்டார்டிகாவில் உள்ள கேசி நிலையம் மற்றும் நார்வே நாட்டின் ஸ்வால்பார்ட் பகுதியில் ஸ்பிட்ஸ்பர்கன் தீவில் உள்ள நை-அலெசுண்ட் ஆகியவையாகும்.

சுத்தமான காற்று உடலாரோக்கியத்திற்கு அவசியமானது என்பதால் இத்தீவிலிருந்து கொள்முதல் செய்த காற்று என விளம்பரம் செய்து "டஸ்மேனிய காற்று" என பெயரிட்டு பாட்டில்களில் இக்காற்றினை அடைத்து வியாபாரம் செய்ய தொடங்கியுள்ளனர்.

# குறுங்கோளிலிருந்து மண்துகள்கள் பூமிக்கு வந்தது : சாதித்து காட்டிய நாசா



**அமெரிக்கா : செப். 26,**

**2016 செப்டம்பர் மாதம், அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்திலிருந்து ஓசிரிஸ்-ஆர்ஈஎக்ஸ் எனும் விண்கலனை பூமியிலிருந்து 200 மில்லியன் மைல்களுக்கு அப்பால் உள்ள பென்னு எனும் குறுங்கோளை ஆராய்ச்சி செய்ய அமெரிக்காவின் மத்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பான நாஸா அனுப்பியிருந்தது.**

அந்த குறுங்கோளிலிருந்து ஆராய்ச்சிகளுக்காக மாதிரி படிவங்களை பூமிக்கு கொண்டு வரவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. பென்னுவின் மேற்பரப்பில் ஆராய்ச்சி செய்ய அந்த விண்கலனிலிருந்து அனுப்பப்பட்ட ஆய்வு சாதனம் 2020ல் பென்னுவை அடைந்தது. பாறைகள் நிறைந்த அந்த குறுங்கோளின் மேற்பரப்பிலிருந்து 250 கிராம் மண்துகள்களை அந்த சாதனம் எடுத்தது. இந்நிலையில் ஓசிரிஸ் விண்கலனிலிருந்து கேப்ஸ்யூல் எனப்படும் மிக சிறிய மற்றொரு விண்கலன் மூலம் பென்னுவின் மண்துகள் மாதிரிகள் ஓசிரிஸ்-ஆர்ஈஎக்ஸ் விண்கலனால் பூமியிலிருந்து 1,07,826 உயரத்திலிருந்து திருப்பி அனுப்பப்பட்டது. அந்த கேப்ஸ்யூல் 6.21 பில்லியன் கிலோமீட்டர் பயணத்தை நிறைவு செய்தது. பூமியின் வளிமண்டலத்தில் நுழைந்து அமெரிக்காவின் உடா மாநிலத்தில் பாலைவனத்தில் வந்திறங்கியது.

இதனை நாஸா அதிகாரிகள் பத்திரமாக மீட்டெடுத்தனர். விண்கலனிலிருந்து வெகு வேகமாக பூமியை நோக்கி வந்த கேப்ஸ்யூல், வளிமண்டலத்தை தாண்டி, அதில் இணைக்கப்பட்ட பாராசூட் மூலம் மெதுவாக பூமியை தொட்டது. "விஞ்ஞானிகளின் சூரிய மண்டல ஆராய்ச்சிக்கு ஒரு புதிய பார்வை கிடைக்க இந்த ஆராய்ச்சி வழி செய்யும்" என நாஸாவின் இந்த முயற்சி குறித்து மகிழ்ச்சி தெரிவித்த அதன் தலைவர் பில் நெல்சன் தெரிவித்தார்.

# உலகிலேயே மிக பெரிய இந்து கோயில் அமெரிக்காவில் அடுத்த மாதம் திறப்பு



**அமெரிக்கா : செப். 26,**

**இந்தியாவிலுள்ள போசசன்வாசி ஸ்ரீ அக்ஷர் புருசோத்தம் சுவாமிநாராயன் சன்ஸ்தா எனும் இந்து மத அமைப்பினால் அமெரிக்காவில் உருவாக்கப்பட்டு வரும் அந்நாட்டிலேயே மிக பெரிய இந்து கோயில், வரும் அக்டோபர் 8ம் தேதி திறக்கப்பட இருக்கிறது.**

10 நாட்களுக்கு பிறகு பொதுமக்கள் தரிசனம் செய்ய அனுமதிக்கப்படுவார்கள். ஏற்கெனவே இந்த அமைப்பினால் 100 ஏக்கரில் உருவாக்கப்பட்ட கோவில் இந்திய தலைநகர் புது டெல்லியில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. அட்லாண்டிக் கடற்பகுதியிலிருந்து சுமார் 210 கிலோமீட்டர் தொலைவில் அமெரிக்காவில் உள்ள வடகிழக்கு மாநிலம் நியூ ஜெர்சி. இத்திருக்கோவில் இம்மாநிலத்தின் பிரபலமான டைம்ஸ் சதுக்கத்திலிருந்து தெற்கே 90 கிலோமீட்டர் தொலைவில் கட்டப்பட்டுள்ளது. சுமார் 183 ஏக்கர் நிலபரப்பில் கட்டப்பட்டுள்ள இத்திருக்கோவிலை கட்டி முடிக்க சுமார் 12 ஆண்டு காலம் ஆனது.

இதன் கட்டுமான பணியில் அமெரிக்கா முழுவதிலுமிருந்து 12 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள் ஈடுபட்டனர். உலக பாரம்பரிய தளமாக ஐ.நா. கூட்டமைப்பின் கலாச்சார அமைப்பான யுனெஸ்கோவினால் அங்கீகரிக்கப்பட்ட தென்மேற்கு ஆசியாவில் உள்ள கம்போடியா நாட்டின் அங்கோர் வாட் திருக்கோவில், 500 ஏக்கர் நிலப்பரப்பில் உருவாக்கப்பட்டது. நியூ ஜெர்சியின் ராபின்ஸ்வில்லே டவுன்ஷிப் பகுதியில் உருவாக்கப்பட்டு வரும் இந்த அக்ஷர்தாம் திருக்கோவில், அங்கோர் வாட் கோவிலுக்கு அடுத்தபடியாக இரண்டாவது உலகிலேயே மிக பெரிய இந்து கோவிலாகும். அமெரிக்காவில் உள்ள சுவாமிநாராயன் அக்ஷர்தாம் கோவில், பண்டைய இந்திய கலாச்சார முறைப்படி வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்திருக்கோவிலில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிலைகள், இந்திய இசைக்கருவிகள் மற்றும் நடன வடிவங்களின் செதுக்கல்கள் ஆகியவை வடிவமைக்கப்பட்டுள்ளன.

இந்து மதத்தில் மூலவர் எனப்படும் முக்கிய தெய்வத்தின் விக்கிரகத்தை தவிர, இத்திருக்கோவிலில் 12 விக்கிரகங்கள் உள்ளன. இக்கோவிலில் 9 சுழல் வடிவ கோபுரங்கள் மற்றும் 9 பிரமிடு வடிவ கோபுரங்கள் உள்ளன. இது பாரம்பரிய கட்டிடக்கலைகளின் சிறப்பம்சங்களை பிரதிபலிக்கும் மிகப்பெரிய நீள்வட்ட குவிமாடத்தையும் கொண்டுள்ளது. சுண்ணாம்பு, கிரானைட், இளஞ்சிவப்பு மணற்கல் மற்றும் பளிங்கு உள்ளிட்ட கிட்டத்தட்ட 20 லட்சம் (2 மில்லியன்) கன அடி கற்கள் கட்டுமானத்திற்கு பயன்படுத்தப்பட்டது. இந்தியா, துருக்கி, கிரீஸ், இத்தாலி மற்றும் சீனா உள்ளிட்ட உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து இவை வரவழைக்கப்பட்டன. இக்கோவிலில், 'பிரம்ம குண்ட்' என அழைக்கப்படும் ஒரு பாரம்பரிய இந்திய படிக்கிணறு உருவாக்கப்பட்டுள்ளது. இதில் உலகம் முழுவதிலுமிருந்து 300-க்கும் மேற்பட்ட புனித நீர்நிலைகளில் இருந்து தண்ணீர் கொண்டு வரப்பட்டு சேர்க்கப்பட்டுள்ளது. அக்டோபர் 18 முதல் பொதுமக்களின் தரிசனத்திற்காக இத்திருக்கோயில் திறக்கப்படும். அக்ஷர்தாம் என்றால் இறைவனின் புனிதமான இருப்பிடம் என பொருள்படும்.

# கனடாவில் படிக்கும் இந்திய மாணவர்களின் பெற்றோர் கவலை பாதுகாப்பு நடவடிக்கை எடுக்க கோரிக்கை




**ஒட்டாவா : செப். 26,**

**கனடாவில் காலிஸ்தான் பயங்கரவாதி ஹர்தீப்சிங் நிஜார் சுட்டுக்கொல்லப்பட்ட விவகாரம் இந்தியா-கனடா இடையே மோதல் போக்கை ஏற்படுத்தி உள்ளது.**

இந்த கொலையில் இந்திய ஏஜெண்டுகள் தொடர்பு இருப்பதாக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ குற்றம்சாட்டி உள்ளார். இந்த குற்றச்சாட்டை இந்தியா மறுத்து உள்ளது. இந்த பிரச்சினையில் இரு நாடுகளுக்கு இடையே மோதல் வெடித்துள்ளதால் அங்குள்ள இந்திய வம்சாவளியினர் மத்தியில் பதற்றத்தை உருவாக்கி இருக்கிறது. கனடாவில் உள்ள கல்வி நிறுவனங்களில் ஏராளமான இந்திய மாணவ-மாணவிகள் படித்து வருகின்றனர். இரு நாடுகளுக்கு இடையே பகை அதிகரித்து வருவதால் சில மாணவர்கள் இனியும் கனடாவில் படிப்பை தொடரலாமா என யோசித்து வருகின்றனர். இது இந்தியாவில் வசித்து வரும் அவர்களது பெற்றோர்களுக்கு கவலையை ஏற்படுத்தி இருக்கிறது.

இது தொடர்பாக பஞ்சாப் மாநிலத்தை சேர்ந்த பல்விந்தர் சிங் கூறும்போது என்னுடைய மகள் கடந்த 6 மாதங்களுக்கு முன்பு தான் கனடாவுக்கு படிக்க சென்றார். தற்போது ஏற்பட்டுள்ள சூழ்நிலை அவளுக்கு கவலை அளித்து இருக்கிறது.

படிப்பில் அவளால் சரிவர கவனம் செலுத்த முடியவில்லை என்று கூறினார். மற்றொரு மாணவியின் தந்தை குல்தீப்கவுர் கூறும்போது என்னுடைய 2 மகள்கள் கனடாவில் படித்து வருகிறார்கள். அவர்களுக்கு ஏதாவது ஆகிவிடுமோ என்ற பதற்றத்தில் உள்ளேன். இந்த பிரச்சினைக்கு இருநாட்டு அரசும் உடனடியாக தீர்வு காண வேண்டும். அவர்களது பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்று கூறினார்.

பஞ்சாப் மாநில பா.ஜனதா தலைவர் சுனில் ஜக்காரி மத்திய வெளியுறவுத் துறை மந்திரி ஜெய்சங்கருக்கு அனுப்பியுள்ள மனுவில் கனடாவில் படித்து வரும் இந்திய மாணவர்கள் அங்குள்ள இந்திய தூதரகத்தை எளிதில் தொடர்பு கொள்ள உதவி மையம் அமைத்து அதற்கான தொலைபேசி எண்ணையும், வெளிநாடு செல்ல திட்டமிடும் மாணவர்கள் தேவைப்படும் பட்சத்தில் அதிகாரிகளை தொடர்பு கொள்ள வாட்ஸ் அப் எண்ணையும் வெளியிட வேண்டும் என தெரிவித்து உள்ளார். காங்கிரஸ் எம்.பி. ரவ்னீத் சிங் பிட்டு இந்த பிரச்சினையில் பிரதமர் மோடி தலையிட்டு மாணவர்களின் நலனை பாதுகாப்பதில் உறுதி செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார்.

# முனிச் நகரில் உலகின் மிகப்பெரிய பீர் திருவிழா 34 லட்சம் பேர் ஒரே இடத்தில்கூடி உற்சாகம்



**ஜெர்மனி : செப். 26,**

**உலகின் மிக பெரிய பீர் திருவிழா ஜெர்மனியின் முனிச் நகரில் களைகட்ட தொடங்கியது. உலகம் முழுவதிலும் இருந்து வந்துள்ள 34 லட்சம் பேர் இந்த பீர் திருவிழாவை கொண்டாடி வருகின்றனர்.**

ஜெர்மனியில் உள்ள முனிச் நகரில் கடந்த 1810ம் ஆண்டு முதல் நடைபெற்று வரும் இந்த பீர் திருவிழா அந்த நாடு பட்டத்து இளவரசர், பட்டத்து இளவரசியின் திருமண நாளை நினைவுகூரும் விழாவாகும்.

செப்டம்பர் மாதம் 2வது வாரம் தொடங்கி அக்டோபர் 3ம் தேதி வரை இந்த பீர் திருவிழா நடைபெறுகிறது. ஒவ்வொரு ஆண்டும் இந்த பீர் திருவிழாவில் 60 லட்சம் பேர் பங்கேற்கின்றனர். தற்போது 34 லட்சம் பேர் திரண்டு பீர் திருவிழாவை கொண்டாடி வருகின்றனர்.

உலக பிரசித்திபெற்ற முனிச் பீர் திருவிழாவில் அமெரிக்கா, ஆஸ்திரியா, பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகளில் இருந்து வந்துள்ள மது பிரியர்கள் ஆட்டம், பாட்டம், கொண்டாட்டத்துடன் திளைத்து வருகின்றனர். பேண்ட் வாத்தியங்கள் முழங்க பாரம்பரிய உடை அணிந்த ஆண்கள், பெண்கள் மெய்மறந்து உற்சாகத்தில் மிதந்தனர். கொரோனா காலமாக கடந்த 3 ஆண்டுகளாக களைகட்டாத பீர் திருவிழா மீண்டும் பழைய குதூகலத்தை எட்டியுள்ளது.

# மதுரை மகாலெட்சுமி நகர் பகுதியில் கண்காணிப்பு கேமராக்களை துவக்கி வைத்த அமைச்சர் மூர்த்தி



மதுரை, செப்.26-

மதுரை மாநகராட்சி மண்டலம் 1 வது வார்டு மகாலெட்சுமி நகர் பகுதியில் குடியிருப்போர் நலச்சங்கத்தின் சார்பில் புதிதாக நிறுவப்பட்டுள்ள கண்காணிப்பு கேமராக்களை மக்கள் பயன்பாட்டிற்கு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி பொதுமக்களின் பயன்பாட்டிற்கு துவக்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் மதுரை மாநகராட்சி ஆணையாளர் கே.ஜே.பிரவீன்குமார், கிழக்கு மண்டலத் தலைவர் வாசுகி சசிக்குமார், உதவி ஆணையாளர் காளிமுத்தன், மாமன்ற உறுப்பினர் பால்செல்வி பாலகிருஷ்ணன், தல்லாகுளம் காவல் உதவி ஆய்வாளர் ஜெகன்நாதன், மகாலெட்சுமி குடியிருப்போர் நலச்சங்க செயலாளர் பேராசிரியர் முருகேசன், புனித மைக்கேல் மேல்நிலைப்பள்ளியின் தலைவர் ஸ்டாலின் ஆரோக்கியராஜ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# மத நல்லிணக்கத்தை ஏற்படுத்திய திருமயம் ஊராட்சித் தலைவர் சிக்கந்தர்



திருமயம்,செப்.26-

திருமயம் அருகே உள்ள ஓலைக்குடிப்பட்டியில் மத நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் இஸ்லாமிய சமுகத்தை சேர்ந்த திருமயம் ஊராட்சி மன்றத் தலைவர் சிக்கந்தர் தனது சொந்த செலவில் இந்து கோவிலுக்கு ரூ.2 லட்சத்து பத்தாயிரம் மதிப்பீட்டில் தகர கொட்டகை அமைத்து கொடுத்து பொதுமக்களிடையே வரவேற்பை ஏற்படுத்தியுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் அருகே உள்ள ஓலைக்குடிப்பட்டியில் உள்ள செல்வகணபதி பாலசுப்பிரமணியர் கோவில் முன்பு பொதுமக்கள் வெயிலிலும் மழையிலும் நின்று சாமி கும்பிட்டு வந்தனர். இந்நிலையில் பொதுமக்கள் ஊராட்சி நிதியிலிருந்து தகர கொட்டகை அமைத்து தருமாறு கோரிக்கை விடுத்திருந்த நிலையில் தனது சொந்த நிதியிலிருந்து 2 லட்சத்து பத்தாயிரம் ரூபாய் செலவில் கோவில் முன்பாக மிகப்பெரிய தகர கொட்டகை அமைத்து கொடுத்தார்.

ஒரு இஸ்லாமியராக இருந்து மத நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் இந்து கோவிலுக்கு தனது சொந்த நிதியிலிருந்து தகர கொட்டகை அமைத்து கொடுத்தது பொதுமக்களிடையே வரவேற்பை ஏற்படுத்தியது. இதனால் மகிழ்ச்சியடைந்த பொதுமக்கள் திருமயம் ஊராட்சித் தலைவர் சிக்கந்தரை குடும்பத்துடன் அழைத்து திறப்பு விழாவினை நடத்தினர், விழாவில் ஊராட்சித் தலைவர் சிக்கந்தர் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்.

திருமயம் ஊராட்சியில் தனது சொந்த செலவில் 2 லட்சத்து 10 ஆயிரம் ரூபாய் செலவு செய்த தனது ஊராட்சித் தலைவர் சிக்கந்தர் என பொதுமக்களிடையே பாராட்டுகளை பெற்று வருகிறார், இந்நிகழ்ச்சியில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு இனிப்பு வழங்கி கொண்டாடினர்.

# மரக்கன்று, விதை பென்சில் வழங்கி மாணவர்களை ஊக்குவிக்கும் மதுரை இளைஞர்



மதுரை , செப்.26-

சுற்றுச்சூழலை காக்கும் வகையில் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு கடந்த 4 ஆண்டுகளாக துணிப் பைகள், விதைப் பென்சில்கள், மரக் கன்றுகளை வழங்கி வருகிறார் இயற்கை ஆர்வலர் க.அழகுராஜா (33).

மதுரை விளாங்குடி கரிசல்குளம் பகுதியைச் சேர்ந்த இவர், ஐடிஐ படித்துள்ளார். பள்ளிகள்தோறும் சென்று குழந்தைகளுக்கான அரசின் விழிப்புணர்வு திரைப்படங்களை ஒளிபரப்பும் தனியார் நிறுவனத்தில் புரொஜக்டர் ஆபரேட்டராக பணிபுரிகிறார்.


சுற்றுச்சூழலை பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் அரசு தொடக்கப் பள்ளி மாணவர்களுடன் இணைந்து கடந்த 4 ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறார். இதற்காக 'மதுரை மண்ணின் மைந்தர்கள்' என்ற பெயரில் அரசு பள்ளி மாணவர்களுக்கு இலவசமாக துணிப் பைகள், விதைப் பென்சில்கள், மரக்கன்றுகள் உள்ளிட்டவற்றை வழங்கி வருகிறார்.

பாலிதீனின் பயன்பாட்டை கைவிட வேண்டும், நீர்நிலைகளை பாதுகாக்க வேண்டும் என்பது தொடர்பான விழிப்புணர்வையும் ஏற்படுத்தி வருகிறார். அழகுராஜாவின் முயற்சிக்கு, அவரது மனைவி ரதி, மகன் பிரபாகரன் ஆகியோர் உறுதுணையாக உள்ளனர். இதுகுறித்து க.அழகுராஜா கூறியதாவது: ஆசிரியரான எனது தந்தை கதர்க்கொடி, எனக்குச் சிறு வயதிலிருந்தே சமூக அக்கறையுடன் வாழ வேண்டும் என்பதை கற்றுத் தந்தார். 'இந்து தமிழ் திசை' நாளிதழில் வெளியிடப்படும் சூழலியல் பாதுகாப்பு சார்ந்த விழிப்புணர்வு கட்டுரைகளை படித்தபோது, களத்தில் இறங்கி நாமும் ஏதாவது செய்ய வேண்டும் என்ற உத்வேகம் ஏற்பட்டது.

2019-ம் ஆண்டிலிருந்து எனது மனைவியுடன் சேர்ந்து அரசு பள்ளி மாணவர்களுக்கு மரக் கன்றுகளை வழங்க தொடங்கினேன். மரக்கன்றுகளை நட்டு பராமரிக்கும் மாணவர்களுக்கு பரிசு வழங்கப்படும் என அறிவித்தோம். இதையடுத்து மாணவர்கள் ஆர்வமாக மரக்கன்றுகளை வளர்க்கத் தொடங்கினர். தற்போது துணிப்பைகள், விதைப் பென்சில்கள் ஆகியவற்றை வழங்கி வருகிறோம்.

நாட்டுக் காய்கறி விதைகளுடன் கூடிய பென்சில், துணிப்பைகளை கோவையிலிருந்து வாங்கி மாணவர்களுக்குக் கொடுக்கிறோம். எனது சம்பளத்தில் மாதம் ரூ.3,500-ஐ இதற்காக செலவிடுகிறேன். பறவைகளுக்கு இரை கிடைக்கும் நோக்கத்தில் பெரும்பாலும் பழ மரக்கன்றுகளை வழங்கி வருகிறேன். மாணவர்களுக்கு அளிக்கப்பட்ட 450 மரக்கன்றுகள் நன்கு வளர்ந்துள்ளன. மதுரையிலுள்ள நீர்நிலைகள் மாசடைந்துள்ளதை புகைப்படங்கள் எடுத்து, அதை பள்ளிமாணவர்களுக்கு காண்பித்து விழிப் புணர்வு ஏற்படுத்தி வருகிறோம். இவ்வாறு அவர் கூறினார்

# கர்நாடகாவில் இன்று பந்த் தமிழகத்தில் இருந்து லாரிகள் இயக்கத்தை நிறுத்திவைக்க அறிவுறுத்தல்



சேலம் , செப்.26-

காவிரி நதிநீர் விவகாரம் தொடர்பாக இன்று கர்நாடக மாநிலத்தில் முழு கடையடைப்பு போராட்டம் நடத்தப்படுவதால், தமிழகத்திலிருந்து கர்நாடகா வழியாக செல்லும் லாரிகளை இயக்க வேண்டாம் என்று மாநில லாரி உரிமையாளர்கள் கூட்டமைப்புத் தலைவர் தனராஜ் அறிவுறுத்தியுள்ளார்.

தமிழ்நாடு லாரி உரிமையாளர்கள் சம்மேளன மாநிலத் தலைவர் தன்ராஜ் நேற்று செய்தியாளர்களிடம் கூறியதாவது: "கர்நாடக, தமிழ்நாடு இரு மாநிலங்களுக்கு இடையே காவிரி நதி நீர் பிரச்சினை இருந்து வருகிறது. இப்பிரச்சினை தொடர்பாக இரு மாநில அரசுகளுக்கு இடையே பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது. ஆனால், இதைப் புரிந்துகொள்ள முடியாமல், கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த சிலர் தமிழகத்தில் இருந்து செல்லும் லாரிகளை தாக்குவதும், கண்ணாடிகளை உடைப்பது போன்ற நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். இதனால், தமிழக லாரி ஓட்டுநர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

காவிரி நதிநீர் பிரச்சினை வலியுறுத்தி கர்நாடகா மாநிலத்தில் முழு கடை அடைப்பு போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. எனவே, தமிழக லாரிகள் கர்நாடக மாநிலத்துக்கு செல்ல வேண்டாம். மேலும், வட மாநிலத்திலிருந்து தமிழகத்துக்கு வரும் லாரிகள் அந்தந்த மாநில எல்லைகளில் பாதுகாப்பாக நிறுத்திக்கொள்ள வேண்டும். கர்நாடக மாநிலத்தில் உள்ள தமிழக லாரிகள் தமிழக எல்லைப் பகுதிகளில் பாதுகாப்பாக கொண்டு வந்து நிறுத்திக்கொள்ள வேண்டும்.

கர்நாடக அரசு லாரி ஓட்டுநர்களுக்கும் லாரிகளுக்கும் உரிய பாதுகாப்பு அளிக்க வேண்டும். வடமாநிலங்களுக்கு சென்று திரும்பும் லாரிகளை ஆங்காங்கே பாதுகாப்பாக நிறுத்திக் கொள்ள வேண்டும். தமிழகத்தில் இருந்து வட மாநிலங்களுக்கு செல்லும் லாரிகளுக்கு கர்நாடக அரசு உரிய பாதுகாப்பு அளிக்க வேண்டும். அதேபோல, கர்நாடகா மாநிலத்திலிருந்து தமிழகம் நோக்கி வரும் அனைத்து லாரிகளுக்கும் நாங்கள் உரிய பாதுகாப்பு அளிப்போம்" என்று அவர் கூறினார்.



கிங்ஸ் பொறியியல் கல்லூரி, புனல்குளத்தில்2023-24-ம்கல்வி ஆண்டிற்கான முதலாம் ஆண்டு வகுப்புகள் துவக்க விழாசிறப்புடன் நடைபெற்றது. இவ்விழாவில் வரவேற்புரையில்கல்லூரியின் முதல்வர் அற்புதவிஜயசெல்விகல்லூரியின்வரலாற்றையும், சிறப்பம்சங்களையும்எடுத்துரைத்தார்கல்லூரியின்செயலர்இராஜேந்திரன்துவக்கவுரையாற்றி, மாணவர்கள் வாழ்க்கையில் வெற்றியடைய பல்வேறு தத்துவமேதைகள் மற்றும் அறிஞர்களின் வாழ்க்கை வரலாற்றை எடுத்துக்காட்டாக கூறினார்.இவ்விழாவில்கல்லூரியின் துணை முதல்வர். சிவகுமார் கல்லூரியில் உள்ள பல்வேறு துறைகள் மற்றும் வேலைவாய்ப்பு பயிற்சி பற்றிதனது வாழ்த்துறையில் கூறினார். இவ்விழாவில் அதிக மதிப்பெண் பெற்று கல்லூரியில் சேர்ந்த மாணவ மாணவிகளுக்குசிறப்பு செய்யப்பட்டது. இறுதியாக கல்லூரியின்முதலாம் ஆண்டு துறைத்தலைவர் சுரேஷ்குமார்நன்றியுரையாற்றினார், இவ்விழாவில் சுமார் ஆயிரத்திற்கும்மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.



வந்தே பாரத் ரயிலுக்கு மதுரையில் வரவேற்ப்பு, திருநெல்வேலியிலிருந்து இருந்து வந்தே பாரத் ரயில் மூலம் மதுரைக்கு வந்த புதுச்சேரி கவர்னர் தமிழிசை, இணை அமைச்சர் முருகன், தமிழக தகவல் தொழில்நுட்ப அமைச்சர் பழனிவேல் தியாகராஜன், வெங்கடேஷ் எம்.பி., மதுரை மேயர் இந்திராணி, பா.ஜ. பொதுச்செயலாளர் சீனிவாசன், பா.ஜ. பொருளாதாரப் பிரிவு மாநிலத் தலைவர் ஷா, மாவட்டத் தலைவர் மகா சுசீந்திரன்,மாவட்டச் செயளாலர் கிருஷ்ணன் உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டனர்




தென்காசி மாவட்டம் திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் வியாச கல்லூரி மாணவிகள் சாதனை, பல்கலைக்கழக செமஸ்டர் தேர்வுகளில் தரவரிசை பட்டியலில் திருநெல்வேலி, தூத்துக்குடி, நாகர்கோவில், தென்காசி ஆகிய மாவட்டங்களில் நடைபெற்ற தேர்வுகளில் வியாசா கல்லூரி மாணவி கணினி அறிவியல் பாடத்தில் ரெஷினா ஷப்ரியாதங்கத்தையும், சான்றிதழ்களையும் தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவியிடம்பெற்று கொண்டார். மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக செமஸ்டர் தேர்வுகளில் தரவரிசை பட்டியல் வெளியிடப்பட்டன தேர்வு எழுதிய 320 மாணவிகளின் 100 சதவீத தேர்ச்சி பெற்று பல்கலைக்கழக அளவில் முதலிடம் பிடித்தது. ஏழு பாடங்கள் உள்ள நிலையில் 29 மாணவியர்கள் பல்கலைக்கழக தரவரிசை பட்டியலில் இடம்பெற்றுள்ளனர். மேலும்4 மாவட்டங்களில் பல்கலைக்கழக தரவரிசை பட்டியலில் 10 கல்லூரிகளில் வியாசா கல்லூரி ஆறாம் இடத்தை பிடித்துள்ளது தென்காசி மாவட்டத்தில் முதலிடத்தை பிடித்த மாணவிகளுக்கு வெள்ளி பதக்கங்களும், தங்க மோதிரங்களும், பரிசுகளுடன் பட்டங்களும் வழங்கப்படும் என வியாசா கல்லூரி சேர்மன் வெள்ளத்துரை பாண்டியன் அறிவித்தார், மற்றும் நிர்வாக இயக்குனர் வி. வெள்ளதாய், செயலாளர் சுந்தர், துணை சேர்மன் பிரகாச வல்லி, கல்லூரி முதல்வர் ஈஸ்வரன் ஆகியோர் உடன் இருந்தனர்.



புதுக்கோட்டை அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் முதலாம் ஆண்டு பயிற்சி வகுப்புகள் தொடக்க விழா நிலைய முதல்வர் சுந்தர கணபதி தலைமையில் நேற்று நடைபெற்றது, நிகழ்ச்சியில் புதுக்கோட்டை மாவட்ட இன்ஜினியரிங் லேத் உரிமையாளர்கள் ஒற்றுமை நலச் சங்கத் தலைவர் சுப்பையா கலந்து கொண்டு தொழிற்பயிற்சி முடித்தவர்கள் சிறு தொழில் தொடங்குவது, அதற்கான வங்கி கடன் பெறுவது உட்பட பல்வேறு விஷயங்களை எடுத்துரைத்தார். நிகழ்வில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு சங்கத் தலைவர் மாருதி கண. மோகன்ராஜ் கலந்துகொண்டு பணிமனையில் மாணவர்கள் எவ்வாறு நடந்து கொள்வது என்பதை விளக்கினார், சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட புதுக்கோட்டை சிட்டி ரோட்டரி சங்கத் தலைவர் அசோகன் மாணவர்களின் தொழில் திறமைகளை வளர்த்துக் கொள்ளுதல் பல்வேறு தொழில் வாய்ப்புகள் சம்பந்தமாக எடுத்துக் கூறினார், நிகழ்வில் பயிற்சி அலுவலர்கள் மனோகரன் கிருஷ்ணன் ராமராஜ் மற்றும் இருபால் பயிற்றுநர்கள் பயிற்சியாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள் நிகழ்வை நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் ஜோதிமணி ஒருங்கிணைத்தார்



புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஒன்றியம், புதுக்கோட்டை விடுதி ஊராட்சி இரண்டாவது வார்டு அரசரடிபட்டி கிராமத்தில் 100 நாள் வேலை உறுதி அளிப்பு திட்டத்தில் பணியாற்றியவர்களுக்கு சம்பளம் வழங்கவில்லை என்று கூறி பயனாளிகள் ஊராட்சி மன்ற தலைவரை முற்றுகையிட முயன்றதால் பரபரப்பு ஏற்பட்டது. சம்பவ இடத்திற்கு வந்த போலீசார் அவர்களை சமாதான படுத்தியதையடுத்து போராட்டம் விலக்கிக் கொள்ளப்பட்டது.




புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி பேரூராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூபாய் 2.08கோடி மதிப்பீட்டில் ஆலங்குடி சந்தையை மேம்பாடு செய்வதற்கான பணிகளை சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் வட்டாட்சியர் விஸ்வநாதன்,ஒன்றியச் செயலாளர் தங்கமணி,பேரூராட்சி மன்றத் தலைவர் ராசி முருகானாந்தம்,நகரச் செயலாளர் பழனிக்குமார், துணை செயலாளர் செங்கோல் மற்றும் கவுன்சிலர்கள் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

## "மண்ணிற்கு போவதை மனிதனுக்கு கொடு"

# "மறைந்த பின்னும் வாழலாம்" தாரக மந்திர புதுக்கோட்டை கோவிந்தராஜன் தமிழக முதல்வருக்கு நன்றி





புதுக்கோட்டை , செப்.26-

"மண்ணிற்கு போவதை மனிதனுக்கு கொடு" "மறைந்த பின்னும் வாழலாம்" தாரக மந்திரத்திற்கு சொந்தகாரரான 92 வது பிறந்தநாள் காணும் புதுகையின் மூத்த குடிமகன், சமூக சேவகர் கோவிந்தராஜன் தமிழக முதல்வருக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

செப்டம்பர்-25ம் தேதியான நேற்று. 92வது பிறந்தநாளை கொண்டாடிய 'கண்ணப்ப நாயனார் கண் தான பிரச்சார மைய' தலைவரும், நல்லாசிரியர் விருது பெற்றவருமான (சித்த )மருத்துவர் .சி. கோவிந்தராஜன், "உறுப்பு தானம் செய்பவருக்கு அரசு மரியாதையுடன் இறுதிச்சடங்கு மேற்கொள்ளப்படும்" என்ற "உறுப்புகள் தந்து உயிர்களை காக்கும்" தியாகத்தைப் போற்றும் வகையில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்திருப்பதைக் கேட்டு மிகவும் மகிழ்ச்சி அடைவதாகவும் , இந்த உயரிய அறிவிப்பை வெளியிட்டதற்காக முதல்வருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்வதாகவும் தெரிவித்தார்.

கோவிந்தராஜன், கண்ணப்ப நாயனார் கண்தான பிரச்சார மையத்தை தொடங்கி பல்லாண்டுகளாக நடத்தி வருகிறார். பள்ளி கல்லூரிகளுக்குச் சென்று கண் தானத்தின் அவசியம் பற்றியும், தேவை பற்றியும் பிரச்சாரம் செய்துவந்ததோடு, கண்களைப் பாதுகாப்பது எப்படி? அதற்கு என்னென்ன உணவுகள் சாப்பிட வேண்டும் என்பதைப் பற்றி நூல்கள் எழுதி இலவசமாக வழங்கி இருக்கிறார். 15000க்கு மேற்பட்ட கண்தான படிவங்களைப் பெற்று மாவட்ட ஆட்சியரிடம் கொடுத்து பாராட்டுப் பெற்றவர். வயது ஒரு தடையாக இருந்தாலும் தன்னுடைய பிரச்சாரத்தை நூல்கள் வழி செய்துகொண்டிருக்கிறார். கண் தானம் பற்றி மட்டும் பிரச்சாரம் செய்து இருந்தவர் தற்போது உடல் உறுப்பு தானத்தைப் பற்றியும் பிரச்சாரம் செய்கிறார்.

"உடல் உறுப்பு தானங்களின் வழிமுறைகள் தானங்களின் சிறப்புகள்" என்ற நூலை எழுதி தன் சொந்த செலவிலேயே அச்சிட்டு இலவசமாக வழங்கிவருகிறார். "மண்ணிற்கு போவதை மனிதனுக்கு கொடு" "மறைந்த பின்னும் வாழலாம்" என்ற இரண்டு தாரக மந்திரத்தோடு பிரச்சாரம் செய்து வருகிறார். இந்த வகையில் தமிழக முதல்வருக்கு அவர் தெரிவித்திருக்கும் நன்றி முக்கியத்துவம் பெறுகிறது.

# புதுக்கோட்டை இந்திய மருத்துவ கழகம் மற்றும் முத்து மீனாட்சி மருத்துவமனை இணைந்து நடத்திய தொடர் மருத்துவ கருத்தரங்கம்



புதுக்கோட்டை, செப்.26-

புதுக்கோட்டை இந்திய மருத்துவ கழகம் மற்றும் முத்து மீனாட்சி மருத்துவமனை இணைந்து இந்திய மருத்துவ கழகத்தில் நடத்திய தொடர் மருத்துவ கருத்தரங்கிற்கு தலைவர் ராமமூர்த்தி தலைமை தாங்கினார் நிகழ்விற்கு பெரியசாமி முன்னிலை வகித்தார், செயலாளர் சுல்தான் அனைவரையும் வரவேற்று பேசினார், தொடர் கருத்தரங்கில் ரேடியாலஜி மருத்துவர் ராஜேஸ்வர் பாலாஜி பல்வேறு விழிப்புணர்வு கருத்துக்களையும் சர்க்கரை நோய் மற்றும் ரத்த அழுத்த நோய் கதிரியக்கவியலின் பங்கு கூறித்துபேசினார்.

பின்னர் மருத்துவர் வினோத்கண்ணா சிறுநீரியல் துறையில் தற்போதைய நவீன மருத்துவம் குறித்துபேசினார், இந்நிகழ்வில் முன்னாள் தலைவர்கள் டாக்டர் சுவாமிநாதன், டாக்டர் ஹெச். .சலீம் உள்ளிட்ட இந்திய மருத்துவக் கழகத்தின் நிர்வாகிகள் முத்துமீனாட்சி மருத்துவமனை நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். புதுக்கோட்டை டாக்டர் ராஜா மாநிலஇந்திய மருத்துவ கழக மருத்துவர் பிரிவு செயலாளர் தேர்வு செய்யப்பட்டதற்கு நிர்வாகிகள் சார்பில் தலைவர் ராமமூர்த்தி பொன்னாடை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார், மேலும் சிறப்பாக செயல்பட்டுவரும் முத்துமீனாட்சிமருத்துவமனை டாக்டர் பெரியசாமிக்கும் தலைவர் ராமமூர்த்தி பொன்னாடை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார், நிறைவாக டாக்டர் சுரேஷ்குமார் நன்றி கூறினார்.

# 'காபி வித் கலெக்டர்" நிகழ்ச்சியில் அரசு பள்ளி மாணவ, மாணவிகளுடன் மாவட்ட ஆட்சித்தலைவர் மெர்சி ரம்யா கலந்துரையாடல்





புதுக்கோட்டை , செப்.26-

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில், 'காபி வித் கலெக்டர்" என்ற நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் மெர்சி ரம்யா இலுப்பூர் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் வயலோகம் அரசு மேல்நிலைப்பள்ளி மாணவ, மாணவிகளுடன் நேற்று கலந்துரையாடினார்.

பின்னர் அவர் தெரிவித்ததாவது: தமிழ்நாடு முதலமைச்சர் அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகள் கல்வியில் சிறப்பாக விளங்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தில் எண்ணற்றத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார். அதன்படி, இல்லம் தேடிக் கல்வி திட்டம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், எண்ணும் எழுத்தும் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் வாயிலாக மாணவ, மாணவிகளின் கல்வி ஆர்வத்தினை மேம்படுத்தி வருகிறார்.

மேலும் பள்ளிகளுக்குத் தேவையான அடிப்படை கட்டமைப்பு வசதிகள், கூடுதல் வகுப்பறை கட்டடங்கள், விளையாட்டு மைதானங்கள் உள்ளிட்டவைகள் மேம்படுத்தப்பட்டு வருகிறது. மாணவ, மாணவிகள் அனைவரும் பாடப் புத்தகங்களை பயில்வது மட்டுமின்றி,சிறந்த அறிஞர்களின் புத்தகங்கள், பொதுஅறிவு புத்தகங்கள் உள்ளிட்ட அறிவை பெருக்கிக்கொள்ளும் சிறந்த புத்தகங்களையும் படிக்க வேண்டும். இவ்வாறு படிப்பதன் மூலம் நீங்கள் இலக்காக வைத்திருக்கும் உயர்ந்த இடத்தினை அடைய முடியும்.


எனவே மாணவ, மாணவிகள் அனைவரும் கல்வியில் சிறந்து விளங்கி உயர்கல்வி பயின்று உயர்ந்த நிலையினை அடைவதற்கு எனது வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன் என தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் செல்வி, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் மஞ்சுளா, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் வசந்தகுமார், தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.



# தமிழகத்திற்கு தண்ணீர் வழங்க எதிர்ப்பு கர்நாடகாவில் இன்று முழு அடைப்பு

# பாஜக கூட்டணியில் இருந்து அதிமுக வெளியேறியது: முறைப்படி அறிவித்தார் இபிஎஸ்






# திருப்பூரில் 10 ஆயிரம் சிறு, குறு நிறுவனங்கள் வேலை நிறுத்தம்: வர்த்தக இழப்பு


| சென்னை / புதுக்கோட்டை | 26.09.2023 | varalaruu.com | பக்கம்:6 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை வரலாறு நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

ஈஸ்வர சந்திர வித்யாசாகர் , இந்திய மெய்யியலாளர், ஓவியர் (பி.1820) (இ.1891)



ஜே. எல். பி. ரோச் விக்டோரியா , தமிழக அரசியல்வாதி, தொழிலதிபர் (பி.1894) (இ.1964)



வ. விஜயபாஸ்கரன் , தமிழக இதழாசிரியர், எழுத்தாளர் (பி.1926) (இ.2011)



மன்மோகன் சிங் , இந்தியாவின் 13வது பிரதமர் (பி.1932)



## இன்றைய நினைவு நாள்

தேசிக விநாயகம்பிள்ளை , தமிழகக் கவிஞர் (பி.1876) (இ.1954)



எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா , இலங்கையின் 4வது பிரதமர் (பி.1899) (இ.1959)



சே. ப. இராமசுவாமி , இந்திய வழக்கறிஞர், அரசியல்வாதி, ஆளுநர் (பி.1879) (இ.1966)

